

# வருடாந்த அறிக்கை 2012

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# உள்ளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| 1. கூட்டுரிமைத் தத்துவம் | 03 |
| 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் | 07 |
| 3. தே.கா.ந.பொ. நிதிய சபை உறுப்பினர்கள் – 2011 | 09 |
| 4. தவிசாளரின் மீளாய்வு | 11 |
| 5. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும் | 14 |
| 6 நிலைபெறத்தக்க அறிக்கையிடல் | 40 |
| 7. ஆளுகை அறிக்கையிடல் – நிறுவன ஆளுகை | 46 |
| 8. ஆளுகை அறிக்கையிடல் – நிறுவன இடர் முகாமைத்துவம் | 58 |
| 9. நிதிக் கூற்றுக்கள் -2012 | 65 |
| 10. கணக்காய்வாளர் அறிக்கை | 79 |
| 11. ஒரே பார்வையில் ஆறு ஆண்டுகள் | 92 |
| 12. கூட்டுரிமைத் தகவல்கள் | 95 |

# 1. கூட்டுரிமைத் தத்துவம்



## தொலைநோக்கு

# தேவையுள்ள சகல துறைகளுக்கும் காப்பு வலையமைப்பையும் பாதுகாப்பையும் ஏற்படுத்தல்



# செயற்பணி

பின்வருமாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்:

- சமூகத்தில் தேவையுள்ள சகல பிரிவினருக்கும் தாங்கிக்கொள்ளக்கூடியதும் வினைத்திறனானதும் முற்போக்கானதுமான காப்புறுதித் திட்டங்களை ஏற்படுத்தல்;

- மாற்றமுறும் தேவைகளிலிருந்து எழும் உயர் இடர்களிலிருந்து காப்புப் பெறுவதற்கு வளங்களைத் திரட்டுதல் மற்றும் வேறு ஒழுங்குகளுக்கு ஊடாக உள்நாட்டுச் சந்தைக்குத் தீர்வுகளை வழங்குதல்; மற்றும்

- உள்நாட்டுக் காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக ஆற்றலினை அளிப்பதற்கென இலங்கையில் மீள் காப்புறுதிச் சந்தை ஒன்றை ஏற்படுத்தல்.

# கூட்டுரிமை விழுமியங்கள்




- நம்பகத்தன்மை
- நேர்மை
- பொறுப்புக்கூறல்
- நிதி ரீதியான காத்திரத் தன்மை
- தொழில்வாண்மை மிக்க முகாமைத்துவம்

# 2. இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

- சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி உத்தேச இலக்குக் குழுக்களின் நன்மைக்காக காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மீள் காப்புறுதிச் சந்தையில் குறைந்தபட்சம் 50% இனைக் கைப்பற்றுவதற்கு மீள் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தினை வடிவமைத்து முகாமை செய்தல்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல காப்புறுதித் திட்டங்களினதும் முகாமைத்துவத்தைத் தன்னியக்கப்படுத்துதல்.

- சகல பயனாளிகளுக்கும் கூடிய வினைத்திறன் வாய்ந்த சேவையினை வழங்குவதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.

- அடுத்துவரும் 5 ஆண்டு காலப்பகுதியில் பங்குதாரர்களுக்கான உச்சபட்ச வருவாயை அடைந்துகொள்வதற்கென முதலீடுகளை வினைத்திறனாக முகாமை செய்தல்.

- கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உரிய காப்புறுதித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கென அக்கறை கொண்ட தரப்பினரை தூண்டுதலும் ஊக்குவித்தலும்.

- தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எதிர்கால நடவடிக்கைகளை சமாளிப்பதற்கென போதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- இடர் முகாமைத்துவ அலகொன்றை நிறுவி சந்தை ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தியத்திற்கு அதன் எதிர்கால காப்புறுதித் தொழில் தொடர்பில் வழிகாட்டலினை வழங்குதல்.

# 3. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபை உறுப்பினர்கள் -2012



திரு. டி. விதானகமாச்சி

தவிசாளர்



திரு. ஜே. தடல்லகே

(சபை உறுப்பினர்)



கலாநிதி. லோகித்த சமரவிக்ரம

(சபை உறுப்பினர்)



திரு. டபிள்யூ. எச். பியதாச

(சபை உறுப்பினர்)



திரு. என். குலசேகர

(சபை உறுப்பினர்)



திரு. ஏ.கே. செனவிரத்ன

(சபை உறுப்பினர்)

# 4. தவிசாளரின் மீளாய்வு

## ஆண்டறிக்கை – 2012 இனைச் சமர்ப்பித்தல்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபை சார்பில் 2012 இல் முடிவடையும் ஆண்டிற்கான தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதற்கான சிறப்புரிமையை நான் கொண்டுள்ளேன்.

2012 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தேறிய ஈட்டப்பட்ட கட்டுப்பண வருமானமானது சிறிதளவான உயர்வொன்றாக 2011 இல் காணப்பட்ட ரூபா. 2.5 பில்லியனுக்கு எதிராக ரூபா. 3.02 பில்லியனாக காணப்பட்டது. 2012 இலுள்ள தேறிய இலாபமானது 2011 இன் ரூபா. 2.2 பில்லியன் தேறிய இலாபத்திற்குச் சமனான ரூபா. 2.1 பில்லியனாகத் தொடர்ந்திருந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதிச் செயலாற்றுகையானது செயலாற்றுகை மீளாய்வுப் பிரிவில் விரிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. “அக்ரஹாரா” மருத்துவ காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம் போன்ற சமூக ரீதியில் நாட்டங்கொண்ட காப்புறுதித் திட்டங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியமானது தொடர்ந்து அமுல்படுத்தியது. வேலை நிறுத்த கலகம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத காப்புகள் என்பவற்றிற்கான காப்புறுதி ஆவணங்களை வழங்குதல் தொடர்பில் விசேட கணக்கினை முகாமை செய்தல், 28/2006 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் கட்டளைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் பொதுக் காப்புறுதித் தொழில்கள், மற்றும் காப்புறுதிக் கம்பனிகளினால் மீள் காப்புறுதி நிலைப்படுத்தல்கள் தொடர்பில் 20% கட்டாய மீளளிப்பினை ஏற்றுக்கொள்தல் ஆகியன மீளாய்வின் கீழ் இவ் வருட காலப்பகுதியில் அடைந்த செயலாற்றுகைக்காகப் பிரதானமாகப் பங்களித்துள்ளன.

மேலும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 20% கட்டாய மீளளிப்பினை 30% ஆக உயர்த்துதல் மற்றும் அக்ரஹாரா மருத்துவ காப்புறுதித் திட்டத்தினை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தல் போன்ற சில தந்திரோபாய முன்னெடுப்புக்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

## பாராட்டுக்கள்

நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும், தனது தாராளமான வழிகாட்டல் மற்றும் ஆதரவுக்காக திறைசேரியின் செயலாளருக்கும், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளுக்கும் மற்றும் IBSL இனது அதிகாரிகளுக்கும் சபைக்கு அவர்களால்

வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்காக எனது மனமார்ந்த நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சபையின் உறுப்பினர்களுக்கு அவர்களின் பெறுமதியான பங்களிப்புக்காகவும் மற்றும் பெறுமதிவாய்ந்த வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபாரப் பங்காளர்கள் எம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் தன்னுறுதிக்காகவும் எனது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

எமது ஊழியர்களே எமது அடித்தளம். தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வெற்றிக்காக முன்னோக்கிச் செல்வதாகவே அவர்களின் அர்ப்பணிப்பான சேவை அமைந்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்களினால் வழிநடத்தப்படும் எமது குழுக்களிற்கும் எனது நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒப்பம்,**

**டி. விதானகமாச்சி**

தவிசாளர்

# 5. முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

# 5.1 பொதுச் சுற்றாடல் மீளாய்வு

## காப்புறுதிக் கைத்தொழில் மீளாய்வு


2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தொழிற்பாட்டிலிருந்த இலங்கை காப்புறுதிச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட 21 காப்புறுதிக் கம்பனிகள் காணப்பட்டன. ஒட்டுமொத்தமாக காப்புறுதித் துறையானது நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் கிட்டத்தட்ட 3% இற்குக் கணக்கிடப்பட்டது. எனினும், மொத்தக் காப்புறுதித் துறையினதும் சொத்துக்களின் 60% இற்கு மேலாக கணக்கிடப்படும் இரு கம்பனிகளுடன் சேர்ந்து ஒரு சில பெரிய காப்பீட்டாளர்களின் மூலம் இக் கைத்தொழிலானது ஆதிக்கத்துக்குட்பட்டு வந்தது. உயர் குத்தகை வீதங்களுடன் இணைந்த வாகன இறக்குமதித் தீர்வைகளின் கூடிய அதிகரிப்பின் காரணத்தினால் விளைந்த வாகன இறக்குமதிகளின் குறைவான வளர்ச்சியின் மூலம் காப்புறுதிச் சந்தையின் வளர்ச்சியானது பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது. பங்குச் சந்தையின் நலிவுற்ற செயற்றிறனின் விளைவாக அலகு – இணைப்பு ஆயுட் காப்புறுதி வெளியீடுகளிற்கான கேள்வியில் வீழ்ச்சி மற்றும் உயர் வட்டி வீதங்கள் காரணமாக வீடமைப்புக் கடன்களில் குறைந்த அதிகரிப்பு என்பனவும் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. இருந்தபோதிலும், பேரினப் பொருளாதார நிலமைகளில் படிப்படியான அதிகரிப்புடன் எதிர்வரும் ஆண்டுகளில் எழும் சாத்தியமான சிறந்த செயற்றிறனின் அறிகுறிகளுடன் 2012 ஆம் ஆண்டில் ஆயுட்காப்புறுதி அற்ற சந்தை 14.65% இனாலும் ஆயுட்காப்புறுதிச் சந்தை 6.56% இனாலும் வளர்ச்சியடைந்தது. ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது காப்புறுதிச் செயற்பாட்டு மட்டத்தினை அளவிடும் காப்புறுதி விற்பனை ஊடுருவல் திறனானது இலங்கைப் பொருளாதாரத்தின் அளவு தொடர்பில் குறைவாக இருக்கின்றது. மொ.உ.உ. (GDP) இல் சதவீதமாக மொத்தத் தவணைக் கட்டணத்திற்கேற்ப அளவிடப்பட்ட காப்புறுதி விற்பனை ஊடுருவல் திறன் மற்றும் மொத்தத் தவணைக் கட்டணத்தினை சனத்தொகைக்குத் தொடர்புபடுத்தும் காப்புறுதிச் செறிவுத்தன்மை என்பன முறையே 1.15% மற்றும் ரூபா. 4,287 கொண்ட ஒப்பீட்டு ரீதியில் முக்கியத்துவமற்ற மட்டங்களாக கணக்கிடப்பட்டன.

# தே.கா.ந.பொ.நி. இன் வகிபாகம்


2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாட்டின் நிலைத்துநிற்கும் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி மீளாற்றலினை வழங்கியதன் மூலம் தே.கா.ந.பொ.நி. பங்களிப்புச் செய்தது. தே.கா.ந.பொ.நி. இனுடைய இப் பங்களிப்பானது சுகாதாரக் காப்புறுதித் திட்டங்கள், பொதுக் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் மீள்காப்புறுதி போன்ற பல்வேறுபட்ட காப்புறுதி பாதுகாப்புக்கள் மூலம் செய்யப்பட்டுள்ளது. அரச துறை தொழிற்படைக்காக வடிவமைக்கப்பட்ட அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டமானது இலங்கையில் பிரதான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் நாட்டிற்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் வெளிநாட்டில் பணியிலமர்த்தப்பட்ட தொழிற்படைக்கும் பொறுப்பாக இருப்பதுடன் மீள்காப்புறுதித் திட்டத்திற்கூடாக பொருளாதார ஆபத்துக்களையும் தாங்கிநிற்கின்றது.

# 5.2.1 ஏழு ஆண்டுகளுக்கான நிதி மீளாய்வு

**வரைபடம்- 5.02: அலுவலர் குழாத்துடன் தொடர்புபட்ட செலவினங்களின் கடந்தகாலப் போக்கு**




மாறாது காணப்பட்ட அலுவலர் குழாத்துடன் தொடர்புபட்ட செலவினங்களின் விதமானது ஏழு ஆண்டுகளில் அதிகரித்த அதேவேளை 2012 ஆம் ஆண்டில் உயர்ந்த ஆட்சேர்ப்பு வீதம் காரணமாக அதிகரிப்பானது சற்று உயர்வாக இருந்தது. 2012 ஆம் ஆண்டில் ரூபா. 70 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டதுவே அதி உயர்வானதாகும். புதிய ஊழியர்களை ஆட்சேர்த்தமை அதேபோல சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அதிகரிப்பு என்பனவே இதற்குக் காரணமாகும்.





.

**வரைபடம் - 5.05: தேறிய இலாபத்தின் கடந்தகாலப் போக்கு**

தேறிய இலாப பாங்கானது 2009 ஆம் ஆண்டு வரை 4 வருடங்களுக்கு அதிகரித்துச் செல்லும் போக்கு ஒன்றினைக் காட்டியதுடன் அதன் பின்னர் பயங்கரவாதக் காப்பீட்டுப் பாதுகாப்பிற்கான கேள்வியின் வீழ்ச்சி காரணமாக 2010 ஆம் ஆண்டில்

கணிசமானளவு குறைவடைந்தது. 2011 ஆம் ஆண்டில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7% இனால் சற்றுக் குறைவடைந்தது. 2010 – 2012 வரையான ஆண்டுகளின் போது இது சற்றுக் குறைவடைந்தது.

**வரைபடம்- 5.06: திரட்டிய நிதியத்தின் கடந்தகாலப் போக்கு**




திரட்டிய நிதியமானது 2010 ஆம் ஆண்டு வரை ரூபா. 9,695மில்லியனாக அதிகரித்துள்ளது ஆனால் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் 12% இனால் குறைவடைந்தது. மேலும், 2012 ஆம் ஆண்டின் முடிவில் ரூபா. 5,935மில்லியனாக நிதியம் குறைவடைந்துள்ளது. நிதியத்துக்கு மாற்றப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் தொடர்பில் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த தேறிய இலாபத்திற்கு மேலதிகமாக வரி ஒன்றினை விதித்ததன் விளைவாக திரட்டிய நிதியம் குறைவடைந்துள்ளது.

# நிதிச் செயற்றிறன்– 2012

## தவணைக் கட்டண வருமானத்தின் வகுதி அடிப்படையிலான வகைப்பாடு

அட்டவணை-5.01அ: **தவணைக் கட்டண வருமானத்தின் வகுதி அடிப்படையிலான வகைப்பாடு**

| வகுதி | 2012<br>ரூபா. | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|---|
| **01. தேறிய உழைத்த தவணைக் கட்டண வருமானம்** | | | |
| தவணைக் கட்டண வருமானம் –அரசாங்க மோட்டார் | 206,595,378 | 215,199,457 | 237,386,267 |
| தவணைக் கட்டண வருமானம் – மீள் காப்புறுதி | 463,610,216 | 198,551,912 | 296,078,296 |
| தவணைக் கட்டண வருமானம் – பாராளுமன்ற உறுப்பினர்கள் | 10,000,000 | 10,000,000 | 10,000,000 |
| தவணைக் கட்டண வருமானம் – வெளிநாட்டுத் தொழில் | 54,577,250 | 208,799,952 | 231,968,216 |
| தவணைக் கட்டண வருமானம் – மோட்டார் சாராத | 104,047,985 | 170,876,837 | 149,796,387 |
| மொத்த உழைத்த தவணைக் கட்டணம் | 2,281,210,351 | 2,006,556,886 | 1,874,425,103 |
| தவணைக் கட்டண மீளளிப்பு | (34,291) | (26,080) | (4,194,863) |
| **மொத்த உழைத்த தவணைக் கட்டணம்** | 3,120,006,892 | 2,809,958,964 | 2,795,459,406 |
| மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் | (1,304,600) | (179,367,937) | (132,180,421) |
| **தேறிய உழைத்த தவணைக் கட்டணம்** | 3,118.702,292 | 2,630,591,027 | 2,663,278,785 |
| கிட்டிய தவணைக் கட்டணத்திற்கான தேறிய ஒதுக்கு மாற்றம் | (95,954,471) | (141,879,032) | 225,260,471 |
| தேறிய உழைத்த தவணைக் கட்டணம் | 3,022,747,821 | 2,448,711,994 | 2,888,539,456 |

அட்டவணை -5.01ஆ: அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டத்தினை நோக்கியதான பங்களிப்பு

| மூலம் | 2012<br>ரூபா. | 2011<br>ரூபா. | 2010<br>ரூபா. |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| அரசாங்க ஊழியர்களிடமிருந்தான பங்களிப்பு | 588,435,521 | 623,424,037 | 595,140,400 |
| அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு | 275,000,000 | 494,299,000 | 442,790,000 |
| **மொத்தம்** | 863,435,521 | 1,117,723,037 | 1,037,930,400 |

அட்டவணை-5.02: **தவணைக் கட்டண வருமானம் மற்றும் பங்களிப்பு வருமானம் என்பவற்றின் போக்குப் பகுப்பாய்வு**

(சகல தரவுகளும் இலங்கை ரூபாவில்)

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| பங்களிப்பு வருமானம் | | | | | | |
| அக்ரஹாரா மருத்துவக் காப்புறுத் | 925,340,682 | 1,075,339,833 | 1,013,898,510 | 1,037,930,400 | 1,117,653,037 | 863,435,521 |
| தவணைக் கட்டண வருமானம் மோட்டார் வாகன | | 130,018,979 | 244,352,905 | 237,386,267 | 215,199,457 | 206,595,378 |
| தவணைக் கட்டண வருமானம் மீள்காப்புறுதி | | 341,170,103 | 473,434,837 | 296,078,296 | 198,551,912 | 463,610,216 |
| தவணைக் கட்டண வருமானம் பொதுக் காப்புறதி | | 148,428,753 | 216,086,561 | 391,764,603 | 389,676,789 | 169,625,230 |
| மொத்த உழைத்த தவணைக் கட | 2,178,012,010 | 2,317,492,759 | 2,420,345,104 | 1,874,425,103 | 2,006,556,886 | 2,281,210,354 |
| மொத்த தவணைக் கட்டண வரு | 3,103,352,692 | 4,012,450,427 | 4,368,117,917 | 3,837,584,669 | 3,927,638,081 | 3,984,476,699 |

மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான உறுப்பினர் பங்களிப்பு

இத்திட்டத்தில் அங்கத்தவராகக் கூடிய உத்தியோகத்தர்கள் மாதாந்தம் ரூபாய் 75 ஐ பங்களிப்பு செய்கின்றனர். பண அடிப்படையில் வருமானம் கணிக்கப்படுவதால் வருடாந்த வருமானம் மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் வேறுபடுகின்றது. புதிய ஆட்சேர்ப்புக்கள் காரணமாக பங்களிப்பில் சற்று அதிகரிப்பு இருத்தல் வேண்டும்.

# காப்புறுதித் திட்ட மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஆரம்பிப்புடன், சமூகத்தின் தேவையுள்ள பிரிவுகளின் நன்மைக்காக அர்ப்பணிப்பான காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரம் ஒன்று தே.கா.ந.பொ. நிதியத்திடம் வழங்கப்பட்டது.

**i. அரசாங்க ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹாரா)**

அரசாங்க அலுவலர்களின் நன்மைக்காக 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மருத்துவக் காப்புறுதித் திட்டமே அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டம் என அறியப்படுகின்றது. மாதம் ஒன்றுக்கு உறுப்பினர் ஒருவரிடமிருந்து ரூபா. 11 என்ற ஆரம்பக் கொடுப்பனவு ஒன்றுடன் இது இதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மாதம் ஒன்றுக்கு ரூபா. 75 கொண்ட தவணைக் கட்டணமானது இத் திட்டம் குறித்து ஓய்வூதியத்துக்குரித்துடைய சகல அரசாங்க அலுவலர்களிடமிருந்தும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தனியார்மயப்படுத்தப்பட்டதான அக் காலம் வரையில் இத் திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால்

அமுல்படுத்தப்பட்டது. ஆனால் அதன் தனியார்மயமாக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் இத் திட்டத்தினை அரசாங்கமானது பொறுப்பேற்றுக்கொண்டதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் ஒரு தனியான அரசாங்கத் திட்டமாக அதனை அமுல்படுத்துகின்றது.

**ii. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் (SRCC&TF)**

இலங்கையின் புவியியல் எல்லைக்குள் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக நிகழும் ஆதனத்துக்கான அத்துடன் அல்லது தனிப்பட்ட சுகாதாரத்திற்கான இழப்பு/ சேதம், விபத்து, உடல் ரீதியான காயங்கள் என்பவற்றினை எதிர்பார்த்து பாதுகாப்பதற்கென நீட்டப்பட்ட, இலங்கையில் உரிமம் பெற்ற பொதுக் காப்புறுதி நிறுவனங்களான இந் நிதியத்தின் சகல உறுப்பினர்கள் மூலமும் வழங்கப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பில் மேலதிக காப்புறுதிப் பாதுகாப்பினை வழங்கும் நோக்கத்துடன் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றுக்கு ஏற்ப 1987 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கியதாக இந் நிதியமானது தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

2005.08.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அடுத்து பதவி வகிப்போரான வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பொறுப்பேற்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் இந் நிதியம் நிர்வகிக்கப்பட்டது. அதன் பின்னர், தே.கா.ந.பொ. நிதியத்தின்

இணைப்புடன் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய நிதியத்தின் வரவிலிருக்கும் சகல பணங்களும் தே.கா.ந.பொ. நிதியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது.

இறுதியாக, தே.கா.ந.பொ. நிதியத்தினால் பேணப்படும் விசேட கணக்கிற்கு இப் பணங்கள் மாற்றப்பட்டன.

**iii. பாராளுமன்ற உறுப்பினர் காப்புறுதித் திட்டம்**

தே.கா.ந.பொ. நிதியமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன் பெறுகின்றனர். இத் திட்டமானது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரும் நன்மைகளை வழங்குகின்றது:

1. ரூபா. 5 மில்லியன் வரையிலான விபத்துக் காப்புறுதிப் பாதுகாப்பு

   எதிர்பாராத இறப்பு ரூபா. 5,000,000.00

   விபத்துக் காரணமாக முழுமையான அங்கவீனம் ரூபா. 5,000,000.00

2. வருடம் ஒன்றுக்கான மருத்துவக் காப்புறுதிப் பாதுகாப்பு ரூபா. 200,000.00

### iv. இலங்கையில் காப்புறுதிக் கைத்தொழிலுக்கான மீள்-காப்புறுதிப் பாதுகாப்பு

தே.கா.ந.பொ. நிதியச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கையில் மீள் காப்புறுதி ஆபத்தினை தே.கா.ந.பொ. நிதியமானது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது. மீள் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தத் தொகையில் 20% வரை பெற்றுக்கொள்வது இலங்கையிலுள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளுக்குக் கட்டாயமாகும். தே.கா.ந.பொ. நிதியமானது 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத முடிவின் வரையில் மீள்காப்புறுதி நடைமுறை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் 20% ஏற்பாட்டினை மீளக் காப்புறுதி செய்தது.

### v. மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம் (அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கான)

அரசாங்க நிறுவனங்களுக்கு (விருப்பத் தேர்வான) மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கு (விருப்பத் தேர்வான) சொந்தமான மோட்டார் வாகனங்கள் இழப்பு அல்லது சேத ஆபத்தினை எதிர்பார்த்து காப்புறுதி செய்யப்படும் என்பதுடன் அத்தகைய இழப்புக்கள் அரசாங்கத்தினால் தாங்கப்படும். தே.கா.ந.பொ. நிதியமானது ஆரம்பத்தில் அரசாங்கத் துறைக்கு மோட்டார் வாகனக் காப்புறுதியினை வழங்க ஆரம்பித்திருந்தது என்பதுடன் அதன் பின்னர் அதனை தனியார் துறைக்கு ஒரு தாங்கக்கூடிய தவணைக் கட்டணம் ஒன்றில் விரிவாக்கியது. இதன் முழுமொத்த மோட்டார் காப்புறுதியானது தீ மற்றும் களவு, மூன்றாம் தரப்புச் சேதங்கள் (மரணம் மற்றும் காயம்) அத்துடன் வெள்ளப் பெருக்கு, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் போன்ற மேலதிக காப்பீடுகளையும் உள்ளடக்கும்.

### vi பொதுக் காப்புறுதித் திட்டம்

2009.08.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1615/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க, பொதுக் காப்புறுதித் தொழிலின் கீழ் தீயபாயக் காப்புறுதி ஆவணங்கள், கடலபாயக் காப்புறுதி ஆவணங்கள், வேலையாட்கள் நட்டஈட்டு காப்புறுதி ஆவணங்கள் மற்றும் நானாவித காப்புறுதி ஆவணங்கள் என்பவற்றை வழங்குவதற்கு தே.கா.ந.பொ. நிதியத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# அக்ரஹார மருத்துவக் காப்புறுதி



12/2005 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் விளைவாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் "அக்ரஹார" மருத்துவக் காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பதுடன் திருமணம் செய்த ஊழியர் உறுப்பினர், வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் (அவர்கள் திருமணம் செய்யாமல், வேலையற்றோர்களாக மற்றும் 21 வயதுக்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) மற்றும் திருமணம் செய்யாத ஊழியர் உறுப்பினர், பெற்றோர்கள் (பெற்றோர்கள் 70 வயதிற்குக் குறைவாக இருந்தால் மாத்திரமே) போன்றோரின் நன்மைக்காக 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைமைத்துவத்தின் கீழ் இது வந்தது.

"அக்ரஹார" மருத்துவக் காப்புறுதித் திட்டமானது அரச சேவகர்கள், மாகாண அரச சேவகர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலினால் முகாமையானது நாம் பெற்றுக்கொள்ளும் சகல கோரிக்கைத் தொகைகளையும் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக எடுத்துள்ளது.

கோரிக்கைத் தொகைக் கொடுப்பனவுச் செய்முறையினைத் துரிதப்படுத்துவதற்கான இலத்திரனியல் அட்டை முறைமையினை அமுலாக்கியதன் பின்னர் ஒரு புதிய கோரிக்கைத் தொகைச் செய்முறைப்படுத்தல் முறைமையினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அமுல்படுத்தியிருந்தது. சகல அவசியமான தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்த பிரகடனப்படுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைத் தொகைகளானவை இலத்திரனியல் அட்டை முறைமையினை அறிமுகப்படுத்தியதன் பின்னர் 3 வேலை நாட்களிற்குள் செலுத்தப்பட்டுள்ளன. இக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பின்வரும் நன்மை வகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. வைத்தியசாலை கட்டணங்களை ஈடுகட்டும் மருத்துவ நன்மைகள்:

   இந் நன்மைகளின் கீழ் வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள், மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சைச் செலவுகள், மருத்துவ ஆலோசனைச் சேவைகள் அல்லது மருத்துவ நிபுணரின் மற்றும் நிபுணரின் சேவைகள், நிலையத்திற்கு உள்ளேயான சிகிச்சை போன்றவற்றுக்கான கட்டணங்கள் வழங்கப்படும்.

2. மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்தல்:

   இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 3 வருடத்திற்கும் ஒருமுறை மூக்குக் கண்ணாடியினைக் கொள்வனவு செய்வதன் பேரிலான செலவினைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 3,500/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

3. இதய சத்திரசிகிச்சைச் செலவுகள் (இதயம் சார்ந்த):

   இத் திட்டத்தின் கீழ் இதயச் சத்திரசிகிச்சைக்கான கொடுப்பனவின் பேரிலான செலவினத்தைப் பூர்த்திசெய்வதற்கு ரூபா. 400,000/- கொண்ட தொகை ஒன்றினைக் கோருவதற்கு அங்கத்தவர்களுக்குத் தகுதியுள்ளது.

4. “நய சுரக்கும்” கடன் உத்தரவாதத் திட்டம்:

   மாதாந்தச் சம்பளத்தின் பத்து மடங்கு பெறுமதிக்கு கடன் உத்தரவாதம் ஒன்று வழங்கப்படும் என்பதுடன் ஏதேனும் நோய் அல்லது முழுமையான அல்லது பகுதியளவு இயலாமை காரணமாக கடன்படுநர் தனது வாழ்க்கையினை அல்லது வாழ்வாதாரத்தின் வழமையான வருவாயினை இழந்தவராக இருப்பின் கடனின் நிலுவைத் தொகை செலுத்தப்படும்.

அட்டவணை-5.03:அக்ரஹார மருத்துவக் காப்புறுதி கோரிக்கைத் தொகைகளின் வகைப்பாடு – ஆண்டு 2012 (இலக்கங்களில்)

| கோரிக்கைத் தொகை வகை | பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கோரிக்கைத் தொகைகள் | செலுத்தப்பட்ட கோரிக்கைத் தொகைகள் | நிலுவையாகவுள்ள கோரிக்கைத் தொகைகள் | நிராகரிக்கப்பட்ட கோரிக்கைத் தொகைகள் |
|---|---|---|---|---|
| இறப்பு | 1,992 | 1,886 | 39 | 67 |
| அங்கவீனம் | 604 | 529 | 52 | 23 |
| குழந்தைப் பேறு | 10,172 | 9,171 | 800 | 201 |
| புற்றுநோய் | 356 | 320 | 22 | 14 |
| இருதய நோய் | 495 | 488 | 03 | 04 |
| மூக்குக் கண்ணாடிகள் | 59,256 | 51,229 | 2,275 | 5,752 |
| ஏனைய நோய்களுக்கான ஏனைய அரசாங்க வைத்தியசாலைக் கட்டணங்கள் | 30,833 | 27,675 | 1,956 | 1,202 |
| ஏனைய நோய்களுக்கான தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | 17,551 | 14,112 | 1,332 | 2,107 |
| சிறுநீரக நோய் | 06 | 05 | 01 | - |
| பக்கவாதம் | 07 | 05 | 01 | 01 |
| **மொத்தம்** | **121,272** | **105,420** | **6,481** | **9,371** |

# மோட்டார் வாகனக் காப்புறுதி



பொது நெடுஞ்சாலைகளில் பாவிக்கப்படும் சகல மோட்டார் வாகன வகைகளும் குறைந்தது மூன்றாம் தரப்புக் காப்புறுதிப் பாதுகாப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இலங்கை அரசாங்கத்தினது அடிப்படைத் தேவைப்பாடாகும். முழுமொத்த காப்புறுதிப் பாதுகாப்பு ஒன்றினூடாக பயணிகள், வாகனங்கள், கட்டடங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கு நன்மைகளை விரிவாக்க முடியும்.

ஆதலினால் வாகனத்தின் உரிமையாளருக்கும் அதேபோல மூன்றாந் தரப்பினருக்கும் சிறந்த சேவையினை வழங்குவதன் மூலம் முழுமொத்த மோட்டார் காப்புறுதி ஒன்றினை தே.கா.ந.பொ. நிதிய மோட்டார் காப்புறுதியானது ஆரம்பித்துள்ளது.

## யாருக்கு

2008 ஆம் ஆண்டிலிருந்து சகல அரச அமைப்புக்களுக்கும் கட்டாயமாகவுள்ள மோட்டார் காப்புறுதிப் பாதுகாப்பினை அவசியமான சகல நன்மைகளுடனும் தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கி வருகின்றது.

தனியார் துறை அதேபோல அரச துறைக்கு குறுங் காலப்பகுதிக்குள் கோரிக்கைத் தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதன் மூலம் சிறந்த சேவையுடன் விரிவான நன்மைகளை வழங்கும் இலக்குடன் தனியார் வாகனங்களைக் காப்புறுதி செய்வதனை 2009/09/01 ஆம் திகதியன்று நாம் அடுத்த நடவடிக்கையினை முன்னோக்கி எடுத்து எமது சேவையினை விஸ்தரித்தோம். எனினும், 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதியமானது அதன் தொழிலினை அரசாங்கத் துறைக்கு மட்டுப்படுத்திக் கொண்டது.

## நன்மைகள்

சாதாரண முழுமொத்தப் காப்பீடானது சகல வகையான ஆபத்துக்களையும் வழங்காது. மேலதிக தவணைக் கட்டணம் ஒன்றினைச் செலுத்துவதன் மூலம் கீழ்க் குறிப்பிடப்படும் ஆபத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கான தெரிவினை வாகனத்தின் உரிமையாளர் கொண்டுள்ளார்.

| தே.கா.ந.பொ. நிதியம் வழங்கும் காப்பீடுகள் | தே.கா.ந.பொ. நிதியம் வழங்கும் காப்பீடுகள் |
|---|---|
| மூன்றாம் தரப்பு ஆதனச் சேதக் காப்பீடு | PAB சாரதி/Pgs-SRCC காப்பீடு (PC) |
| பி.ஏ.பீ (PAB) – சாரதிகள்/ பிரயாணிகள் காப்பீடு | PAB சாரதி/Pgs-TR காப்பீடு (PC) |
| தீர்வையற்ற சுமையேற்றல் காப்பீடு | PAB சா/து.தொ/உ (Dr/CI/Atten)-SRCC காப்பீடு (CMV) |
| வாடகைக் கொள்வனவுக் காப்பீடு | PAB சா/து.தொ/உ (Dr/CI/Atten)-TR காப்பீடு (CMV) |
| காற்றுப் பைகள் (Air Bags) காப்பீடு | PAB Pgs - SRCC காப்பீடு (CMV) |
| இழுவை (Towing) கட்டணக் காப்பீடு | PAB Pgs - TR காப்பீடு (CMV) |
| காற்றுக் காப்பு (Windscreen) காப்பீடு | PAB Emp/செலுத்துனர் (Rider)- SRCC காப்பீடு (MC) |
| பயிற்றுநர் சாரதி காப்பீடு | PAB Emp/ செலுத்துனர் (Rider) - TR காப்பீடு (MC) |
| சாரதி/ துப்பரவு ஊழியர்/ உதவியாளருக்கான WCI காப்பீடு | சாரதி/ துப்பரவு ஊழியர்/ உதவியாளருக்கான PAB காப்பீடு |
| பிரயாணிகளுக்கான சட்டரீதியான பொறுப்புக் காப்பீடு | பயிற்றுநர் சாரதி காப்பீடு - PC/MC |
| தனிப்பட்ட விபத்து நன்மைக் காப்பீடு - Emp/ செலுத்துனர் (Rider) | பயிற்றுநர் சாரதி காப்பீடு – CMV |
| தனிப்பட்ட விபத்து நன்மைக் காப்பீடு - Emp/ செலுத்துனர் (Rider) | பொருள் பரிமாற்றக் காப்பீடு - SRCC |
| தனிப்பட்ட விபத்து நன்மைக் காப்பீடு - Emp/ பின்னிருக்கை செலுத்துனர் (Pillion Rider) | பொருள் பரிமாற்றக் காப்பீடு – TR |
| பொருள் பரிமாற்றக் காப்பீடு – இடர் விளையா பொருட்கள் | பயிற்றுநர் சாரதி காப்பீடு MCP |
| பொருள் பரிமாற்றக் காப்பீடு – இடர் விளையும் பொருட்கள் | வெள்ள அபாயக் காப்பீடு |

**அட்டவணை -5.04:செலுத்திய மோட்டார் வாகன உரிமைக் கோரல்களின் வகைப்படுத்தல்**

| | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | | மொத்தம் | |
| தொகுதி | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (ரூபா.) | உரிமைக் கோரல் எண்ணிக்கை | தொகை (ரூபா.) |
| டிரெக்டர் | 4 | 63,136 | 6 | 3,415 |
| தனிப்பட்ட கார் | 603 | 47,904,785 | 685 | 45,993,550 |
| மோட்டார் சைக்கிள் | 45 | 742,533 | 65 | 660,069 |
| மோட்டார் கோச் | 79 | 10,291,531 | 142 | 6,579,077 |
| லொறி/ காணி வாகனம் | 100 | 14,099,309 | 104 | 3,900,131 |
| லொறி டிரேலர் | | | | |
| இரட்டைப் பயன்பாட்டு வாகனம் | 379 | 31,187,672 | 531 | 30,946,886 |
| வான் | 1 | 61,550 | | |
| டிரேட் பிளேட் (TRADE PLATE) | | | | |
| டிரேலர் | | | 1 | 24,596 |
| மொத்தம் | 1,211 | 104,350,516 | 1534 | 88,083,129 |

# பொதுக் காப்புறுதி



சகல வகையான தீ, கடல் மற்றும் நானாவிதக் காப்புறுதிகளும் இலங்கை அரசாங்கத்தின் அடிப்படைத் தேவைப்பாடாகும்.

## யாருக்கு

சகல அரச அமைப்புக்களுக்கும் கட்டாயப்படுத்தப்பட்ட முழு நன்மைகளுடனும் கூடிய பொதுக் காப்புறுதிக் காப்பீடு

## நன்மைகள்

தே.கா.ந.பொ. நிதியமானது பின்வரும் காப்புறுதிக் காப்பீடுகளை வழங்கி வருகின்றது:

- தீ காப்புறுதி
- ஒப்பந்தக்காரர் அனைத்து இடர்க் காப்புறுதி
- இலத்திரனியல் உபகரணக் காப்புறுதி
- கடல் காப்புறுதி
- வேலையாட்கள் நட்டஈடு
- தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி
- மருத்துவக் காப்புறுதி
- பிரயாணக் காப்புறுதி

அட்டவணை -5.05: பொதுக் காப்புறுதி காப்பு ஆவணங்களின் வகைப்பாடு

| | 2012 | |
|---|---|---|
| **காப்பு ஆவண வகுதி** | | **காப்பு ஆவண எண்ணிக்கை** |
| தீ | | 3 |
| கடல் | நானாவிதம் | 110 |
| தனிப்பட்ட விபத்து | நானாவிதம் | 3 |
| வேலையாள் நட்டஈட்டுக் காப்புறுதி | நானாவிதம் | 2 |
| கொள்ளைகள் | நானாவிதம் | 3 |
| காசுப் பரிமாற்றம் | நானாவிதம் | 4 |
| மின்சார உபகரணம் | நானாவிதம் | 7 |
| ஒப்பந்தக்காரர் அனைத்து இடர் | நானாவிதம் | 17 |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும் | நானாவிதம் | N/A |
| மருத்துவம் | நானாவிதம் | 15 |
| பிரயாணம் | நானாவிதம் | 9 |
| **மொத்தம்** | | **173** |

அட்டவணை-5.06: செலுத்திய மருத்துவ உரிமைக்கோரல் வகைப்பாடு–ஆண்டு 2012

**செலுத்திய மருத்துவக் காப்புறுதி உரிமைக்கோரல் வகைப்பாடு–ஆண்டு 2011 & 2012**

| தொகுதி | 2011 | 2012 |
|---|---|---|
| | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) |
| விபத்து | 1.26 | 2.71 |
| குழந்தைப் பேறு | 3.18 | 3.09 |
| பாரதூரமான நோய் | 0.00 | 2.31 |
| இறப்பு | 1.90 | 0.03 |
| அரசாங்க வைத்தியசாலை | 7.36 | 2.42 |
| வெளியிடம் (OUT DOOR) | 8.08 | 28.23 |
| தனியார் வைத்தியசாலை | 31.79 | 72.07 |
| மூக்கு கண்ணாடி | 4.32 | 8.21 |
| **மொத்தம்** | **69.78** | **119.08** |

# வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத விரிவாக்கம்



1987 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப, வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பத்தினை எதிர்பார்த்து காப்பீட்டினை உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்பட்ட மற்றும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்பட்ட காப்புறுதி ஆவணங்கள் தொடர்பிலான கோரிக்கைத் தொகைகளைப் பூர்த்திசெய்வதற்கென வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்ப நிதியம் (SR & CC) உருவாக்கப்பட்டது. நிலையியல் கொள்கைகளின் கீழ் பயங்கரவாத ஆபத்து உள்ளடக்கப்படாததனால் 1988/89 ஆம் ஆண்டின் குழப்பமான காலப்பகுதியில் விடுக்கப்பட்ட பொது மேன்முறையீடுகளுக்குப் பதிலளிக்கும் முகமாக பயங்கரவாதச் செயற்பாட்டினால் விளைவிக்கப்படும் சேதம்/ இழப்பினை உள்ளடக்குவதற்கு 1989 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கமானது SR & CC நிதியத்தின் நோக்கெல்லையினை விரிவாக்குவதற்குத் தீர்மானித்ததுடன் இந் நிதியமானது வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான அரசாங்க நிதியமாக மீள் பெயரிடப்பட்டது. (இதனகத்துப் பின்னர் SR & CC & TR நிதியமாக குறிப்பிடப்படும்)

அதன் பின்னர் வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியமானது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்குள் எடுக்கப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி நிதி மற்றும் திட்டமிடல்

அமைச்சினால் முகாமை செய்யப்பட்டது. இறுதியாக, 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் 2007 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குள் வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியமானது உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது.

வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியத்தின் உள்ளீர்ப்பின் பின்னர் அச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) ஆவது பந்திக்கேற்ப நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட சகல பணங்களும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் பேணப்படும் விசேட கணக்கு ஒன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்போதய சட்டவாக்கத்திற்கிணங்க பொதுக் காப்புறுதியினை மேற்கொள்வதற்கு உரிமம் பெற்ற சகல நேரடியான காப்புறுதி அளிப்பவர்களுக்கும் **இந் நிதியத்தின் உறுப்புரிமை** கட்டாயமானதாகும்.

**SR & CC & T** நிதியத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- காப்புறுதிக் கம்பனிகளுக்கூடாக தவணைக் கட்டணத்தைச் சேகரித்து இந் நிதியத்திற்கு அனுப்புதல் மற்றும் உயர் வீதத்தில் முதலீடு செய்தல்.
- கோரிக்கைத் தொகைத் தீர்ப்பனவுகள் தே.கா.ந.பொ. நிதியத்தினாலேயே கண்காணிக்கப்படுவதுடன் தே.கா.ந.பொ. நிதியச் சபையின் அனுமதியின் பேரில் கோரிக்கைத் தொகைகள் காப்புறுதிக் கம்பனிகளால் செலுத்தப்பட்டு SR & CC & TR நிதியத்தினால் மீளளிக்கப்படுகின்றது. (காலத்திற்குக் காலம் தே.கா.ந.பொ. நிதியத்தினால் வரையறுக்கப்பட்டவாறு வேறுபட்ட வியாபார வகுப்புக்களின் கீழ் ஆகக்கூடிய பெறுமதிகளுக்கு வேறுபட்டு இந் நிதியத்தினால் வழங்கப்படும் காப்பீடானது வரையறுக்கப்பட்டுள்ளது)
- பயங்கரவாத தாக்குதல்களின் காரணமாக சேதமுற்ற இலங்கை வங்கியினால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மென் (soft) கடன்களை முகாமை செய்தல்.

**வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியத்தின் நோக்கங்களாவன**:

- ❖ இந் நிதியத்தினால் காப்பீடு செய்யப்படும் வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களை உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்பட்ட காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு இந் நிதியத்தின் சகல உறுப்பினர்களினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதித் தவணைக்

கட்டணங்களின் வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத கூறு தொடர்பில் இந் நிதியத்தினை உருவாக்குதல்.

- ❖ வேலை நிறுத்தம், கலவரம் மற்றும் சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் ஆதனத்துக்கான இழப்பு/ சேதம்/ அல்லது தனிப்பட்ட காயத்தினை எதிர்பார்த்து, காப்புறுதி செய்யப்பட்டும் மற்றும் புவியியல் எல்லை விரிவாக்கம் ஒன்றினை ஏற்பாடு செய்யும் அவ் வகையான பொதுக் காப்புறுதி ஆபத்தினை உள்ளடக்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் புவியியல் எல்லைக்குள் அமைந்தும் உள்ள அத்தகைய ஆபத்துக்களுக்கான காப்புறுதி ஆவணங்களில் விவரிக்கப்பட்டவாறு பாதுகாப்பினை வழங்குதல்.

- ❖ கூடிய சொந்தமான இலங்கை நிதியத்திடமிருந்து காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பெறுமதி வாய்ந்த தவணைக் கட்டணத்தினை வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தடுக்க முடியும்.

முன்னைய வருடத்தில் இல.ரூபா. 2,006 மில்லியனுக்கு எதிராக இல.ரூபா. 2,270 மில்லியனாக அதிகரித்த இணைந்த GWP இனை வழங்கியதன் மூலம் SR & CC & TR நிதியத்தின் உறுதியான செயற்றிறன் வாய்ந்ததாக 2012 இல் வியாபார ஆண்டு இருந்துள்ளது என்பதுடன் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு முன்னைய வருடத்தில் இல.ரூபா. 3,495 மில்லியனுக்கு எதிராக இல.ரூபா. 4,200 மில்லியனாக அதிகரித்தது.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10 செயற்குழுக் கூட்டங்கள் மற்றும் 10 தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்களை SR & CC & TR நிதியமானது கூட்டியிருந்தது என்பதுடன் நிதியத்தினை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்ட செயற்குழு மற்றும் தொ.ஆ.கு (TAC) என்பன 2011 ஆம் ஆண்டில் 25.3 மில்லியனுக்கு எதிராக இல.ரூபா. 190 மில்லியன் தொகை கொண்ட 160 கோரிக்கைத் தொகைகளைப் பூர்த்தி செய்திருந்தன.

# மீள் காப்புறுதி



2006 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தே.கா.ந.பொ. நிதியச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 1528/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மீள் காப்புறுதித் தொழிலை நடைமுறைப்படுத்துவதற்கு 2008 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மீள் காப்புறுதித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக் காப்புறுதியின் (ஆயுள் அல்லாத) மீள் காப்புறுதி செய்யப்பட்ட ஆபத்துக்களின் 20% கட்டாய விட்டுக்கொடுப்பினை தே.கா.ந.பொ. நிதியமானது ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கையில் அந்நியச் செலாவணியை தக்கவைத்துக் கொள்வதே இத் திணைக்களத்தினை உருவாக்கியதன் பின்னாலுள்ள பிரதான நோக்கமாகும். மீள் காப்புறுதி விடயம் குறித்து இலங்கையிலுள்ள சகல முதன்மையான காப்புறுதிக் கம்பனிகளுக்கும் வழிகாட்டல் மற்றும் அவசியமான உதவியினை இத் திணைக்களம் வழங்குகின்றது. ஆதலினால் இலங்கையில் "தேசிய மீள்காப்புறுதி வழங்குநராக" தே.கா.ந.பொ. நிதியமானது பிரதானமானதும் தீர்க்கமானதுமான வகிபாகத்தினை செயற்படுத்துகின்றது.

விடயம் சார்ந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க சகல முதன்மையான காப்புறுதிக் கம்பனிகளும் தே.கா.ந.பொ. நிதியத்துடன் அவற்றின் 20%

இனை விட்டுக்கொடுப்பதும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்பிற்குச் சமனான தொகைக்கு ஏதேனும் முதன்மையான காப்புறுதிக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கோரிக்கைத் தொகையினைத் தீர்ப்பதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாகும்.

தே.கா.ந.பொ. நிதியத்துடன் தொடர்பு வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அலயன்ஸ் காப்புறுதிக் கம்பனி அலயன்ஸ்
2. அமானா தகாப்புல் காப்புறுதிக் கம்பனி அமானா
3. ஏசியன் அலயன்ஸ் காப்புறுதிக் கம்பனி பீஎல்சீ
4. அவிவா என்டீபீ காப்புறுதிக் கம்பனி பீஎல்சீ
5. செலின்கோ காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
6. சார்டீஸ் காப்புறுதிக் கம்பனி
7. கொன்டினென்டல் காப்புறுதி லங்கா லிமிட்டெட்
8. கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
9. எச்என்பீ அசுரன்ஸ் பிறைவட் லிமிட்டெட் கம்பனி
10. ஜனசக்தி காப்புறுதி பிறைவட் லிமிட்டெட் கம்பனி
11. எல்ஓஎல்சீ காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
12. எம்பீஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
13. ஒரியன்ட் காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
14. பீப்பிள்ஸ் காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட்
15. சணச ரக்சன சமகம
16. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
17. யூனியன் அசுரன்ஸ் பிறைவட் லிமிட்டெட் கம்பனி

# 6. நிலைத்து நிற்கும் தன்மையினை அறிக்கையிடல்

பல வியாபார சவால்களாக நடவடிக்கை ஒன்றுக்கான அர்ப்பணிப்பானது அநேக தடவைகளில் சிரமத்தினைக் காட்டினாலுங்கூட நிலைத்து நிற்கும் தன்மையானது கூட்டுரிமை நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே வலுவாக உள்ளது. ***பீற்றர் ட்ரக்கர் (*****Peter Drucker*****) போன்ற சிலர் கம்பனி ஒன்றின் நோக்கமானது சமூகத்திற்குச் சேவையாற்றுவதாக உள்ளது என நம்புகின்றனர்.***

ஆனால், நிலைத்து நிற்கும் தன்மையினால் இலாபம், உலகு மற்றும் மக்கள் என்னும் 'மூன்று வித அடிப்படைக் கோட்டுக்கு' அதன் பங்களிப்பினை வியாபாரம் மற்றும் சமூகத்திற்கு சேர்க்க முடியும் என்னும் விழுமியத்தின் மீது கவனத்தினைக் குவிக்கும் பொதுவான கருத்து உள்ளது.

நிலைத்து நிற்கும் தன்மை என்பது இன்று கம்பனிகளின் தந்திரோபாயம் மற்றும் நடவடிக்கைகள் மீதான ஒரு செயற்பயனானதும் ஆழமானதுமான தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இது வெறுமனே ஒழுக்க ரீதியான பொறுப்புடையதாக இருத்தல் என்பது பற்றியதல்ல. இது முனைப்பான வியாபாரத்தினைப் பற்றியது. விரயம் மற்றும் வினைத்திறனின்மை என்பவற்றை இல்லாமற் செய்தலானது எளிய பொருளாதார உணர்வுத் திறனை ஏற்படுத்துவதுடன் உண்மையான அடித்தள மட்டத் தாக்கத்தினையும் உண்டுபண்ணுகின்றது. நிலைத்து நிற்கும் தன்மையின் முன்னெடுப்புக்களானவை அநேகமாக உருவச் சொத்துக்கள், புதிய வருமான மூலங்களைப் பிறப்பிப்பதற்கான நீண்டகால நன்மைகளுடன் குறுங்கால இலாபங்கள் என்பவற்றை இணைப்பதுடன் வியாபாரச் சின்னம் மற்றும் நன்மதிப்பு போன்ற அருவச் சொத்துக்களையும் அதிகரிக்கின்றது.

நிலைத்து நிற்கும் தன்மையானது ஒரு நிறுவனம் முழுவதும் இணைக்கப்படும் போது அதன் தந்திரோபாயம் மற்றும் நடவடிக்கைகளானவை பல பரிமாணங்களினூடே பெறுமானத்தினை உருவாக்கும்:

- வருமானப் பிறப்பாக்கம் – புதிய பொருட்கள், சேவைகள் மற்றும் சந்தைகளிலிருந்து.

- செலவுக் கட்டுப்பாடு – வள வினைத்திறன், குறைந்தளவான சக்தி நுகர்வு மற்றும் விரயக் குறைப்பு.

நிலைத்து நிற்கும் தன்மைக்கான விடயம் ஏற்படுத்தப்பட்டு நன்மைகள் அறிந்துகொள்ளப்பட வேண்டியிருப்பின் நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் அது உருவாக்கும் பெறுமானம் என்பவை அளவிடப்பட்டு வியாபாரச் செயற்றிறனுக்கு இணைக்கப்பட வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிலைத்து நிற்கும் தந்திரோபாயங்களானவை பின்வரும் நிலமையில் முக்கியமான தொழிலுக்கு சீராக்கப்படுகின்றன:

- தே.கா.ந.பொ. நிதியமானது நிலைத்து நிற்றலுக்காக தந்திரோபாயமான அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றியிருத்தல்.
- அமைப்பின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியிலிருந்து சகல வியாபாரத் தீர்மானங்களும் எழுமிடத்து தொழில் மற்றும் நிலைத்து நிற்கும் தந்திரோபாயங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருத்தல்.
- நிலைத்து நிற்கும் தன்மையானது சகல தந்திரோபாய வியாபாரத் தீர்மானங்களினதும் பண்பினைக் கொண்டுள்ளதுடன் கம்பனி நடவடிக்கைகளின் சகல அம்சங்களுடனும் இணைந்தும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தே.கா.ந.பொ. நிதியமானது முயற்சிக்கின்றது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 1 – அரசாங்கம்**


2011 ஆம் ஆண்டில் திரட்டு நிதியத்துக்கான முன்னைய ஆண்டு பங்களிப்பான ரூபா. 3,495 மில்லியனை விட 20% உயர்வான ரூபா. 4,200 மில்லியன் உயர்வான தொகையினை வழங்கியதன் மூலம் தே.கா.ந.பொ. நிதியமானது திரட்டு நிதியத்துக்கான அதன் வருடாந்த பங்களிப்பினை அதிகரித்தது. அதன் கடந்தகாலப் போக்கினைத் தொடர்வதன் மூலம் தே.கா.ந.பொ. நிதியமானது 2010 ஆம் ஆண்டில் ரூபா. 2,000 மில்லியனையும், 2009

ஆம் ஆண்டில் ரூபா. 2,250 மில்லியனையும் 2008 ஆம் ஆண்டில் ரூபா. 1,000 மில்லியனையும் பங்களித்திருந்தது.

அட்டவணை – 6.01: திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு

| பாதீட்டு ஆண்டு | ரூபா. மில்லியன் |
|---|---|
| 2006 | 4,000 |
| 2007 | - |
| 2008 | 1,000 |
| 2009 | 2,250 |
| 2010 | 2,000 |
| 2011 | 3,495 |
| 2012 | 4,200 |

வரைபடம்–6.01: நாட்டின் அபிவிருத்திக்கு தே
காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்
பங்களிப்பு




**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 2 – வாடிக்கையாளர்**

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தே.கா.ந.பொ. நிதியத்தின் கோரிக்கைத் தொகையினைச் செலுத்தும் ஆற்றலினை விரிவாக்குவதற்கென அதன் வாடிக்கையாளர் நம்பிக்கையினைப் பேணுவதற்கு அதன் AAA RAM தரப்படுத்தலினை தே.கா.ந.பொ. நிதியத்தினால் பேணக்கூடியதாக இருந்தது. தே.கா.ந.பொ. நிதியமானது மிக உயர்ந்த மட்டத்தில் அதன் AAA இனது RAM தரப்படுத்தலினை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி வருகின்றது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் “ரன்தொர” கேட்போர் கூடத்தில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் 30 தகுதிபெற்ற காப்புறுதிக் கோரிக்கையாளர்களுக்கிடையே ரூபா. 67 மில்லியனுக்கும் அதிகமாக நட்டஈட்டினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் தே.கா.ந.பொ. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ், 2012 ஆம் ஆண்டின் ஆரம்ப மாத காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றிவரும் இலங்கை வீட்டுப் பணிப்பெண்களுக்காக காப்புறுதிக் காப்பீடுகளை தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சலுகை அடிப்படை ஒன்றில் மருத்துவக் காப்புறுதித் திட்டமான “அக்ரஹார” இனையும் தே.கா.ந.பொ. நிதியமானது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஒவ்வொரு அரச சேவையாளருக்கும் இலத்திரனியல் அட்டையினை வழங்குவதற்கு கருத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆதலால்தான், “அக்ரஹார” மருத்துவக் காப்புறுதி உறுப்புரிமைக்கான தரவுத்தளத்தினை உருவாக்க முடிவதுடன் வைத்தியசாலைகளிலிருந்து வசதியாக மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு சிறப்புச் சலுகை அளிக்கப்படும்.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு - சமூகம்**

அனுராதபுரத்தில் அலயபத்துவ என்னும் இடத்தில் இடம்பெற்ற தயட்ட கிருல கண்காட்சி – 2012 இன் போது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலவச கண் சிகிச்சை மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்கல் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டது. அத்துடன் தயட்ட கிருல கண்காட்சி – 2012 இற்காக தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டு பாதுகாப்பினையும் தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கியுள்ளது.

தயட்ட கிருல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்– 2012 இன் கீழ் அலயபத்துவ கிராமிய வைத்தியசாலையில் மருத்துவ கூடம் (ward) ஒன்றினை நிர்மாணித்து நன்கொடையாக அளிப்பதற்கு தே.கா.ந.பொ. நிதியம் பொறுப்பாகவிருந்தது. இந் நோக்கத்திற்காக, ரூபா. 19.0 மில்லியன் கொண்ட ஒரு தொகை தே.கா.ந.பொ. நிதியத்தின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

**அக்கறைகொண்ட தரப்பினர் குழு 4 – ஊழியர்கள்**

**<u>பயிற்சி மற்றும் அபிவிருத்தி</u>**

உயர்ந்த திறன்மிக்க தொழிற்படையினைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஆற்றல்களையும் நிபுணத்துவத்தையும்

அதிகரிப்பதற்கு வியாபாரத்தினை மையப்படுத்திய பயிற்சியில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது நம்பிக்கை கொண்டுள்ளது. காப்புறுதித் துறையுடன் தொடர்புற்ற புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக தே.கா.ந.பொ. நிதியமானது காப்புறுதி மற்றும் கணக்கீடு பற்றிய அறிவினை அதிகரிப்பதற்கு அதன் ஊழியர்களுக்கு வழிகாட்டலினை வழங்கியது. ஆதலினால் இந்தியக் காப்புறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் ஊழியர்களுக்கான வகுப்புக்களை தே.கா.ந.பொ. நிதியம் நடாத்தியதுடன் அதேபோல அப் பரீட்சைக் கட்டணங்களுக்கும் நிதியுதவி அளித்தது. காப்புறுதிக் கைத்தொழிலிலுள்ள தொழில்சார் விரிவுரையாளரால் இவ் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

நிதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்காக தற்போது பயன்படுத்தப்படும் Accpac ERP முறைமையினைப் பற்றி கணக்கீட்டுப் பிரிவிலுள்ள ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

**புத்தூக்கம்**

ஹென்ரி பெட்ரிஸ் மைதானத்தில் 2012 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் “வருடாந்த பக் மஹ உல்லெல” நடாத்தப்பட்டது.





# 7. ஆட்சி அறிக்கையிடல் – தொழில்முயற்சி ஆட்சி

## அறிமுகம்

தொழில்முயற்சி ஆட்சி என்பது அமைப்பு ஒன்றின் கூட்டுரிமை ஆட்சி மற்றும் வியாபார ஆட்சி அம்சங்கள் இரண்டையுமே உள்ளடக்கும் சட்டகம் ஒன்றினை விபரிக்கும் வளர்ந்து வரும் பதம் ஆகும். செயற்றிறன் முகாமைத்துவத்துடன் தந்திரோபாய ரீதியில் இணைக்கப்படும் சிறந்த கூட்டுரிமை ஆட்சியின் சகலவற்றுக்குமான தீர்வொன்றினை அடைந்துகொள்ளதலானது கம்பனிகள் அவற்றின் வியாபாரத்தினை முன்னோக்கி நகர்த்தும் அடிப்படை செலுத்திகளின் மீது கருத்தினைக் குவிப்பதற்கு ஏதுவாக்கும். இது ஒரு சவால் மற்றும் ஒரு சந்தர்ப்பம் இரண்டாகவும் இருக்கின்றது.

கூட்டுரிமை ஆட்சி செய்முறைகளின் இரு பரிமாணங்களை அதாவது சமநிலையில் வைத்திருக்கப்பட வேண்டிய ஒத்திசைவு மற்றும் செயற்றிறன் என்பவற்றை தொழில்முயற்சி ஆட்சியானது உள்ளடக்கியுள்ளது என்பதே சட்டகம் பற்றிக் குறிப்பிடுவதற்கான அடிப்படை கருத்தாகும். சபைக் கட்டமைப்புக்கள் மற்றும் வகிபாகங்கள் அதேபோல நிறைவேற்று ஊதியம் போன்ற பிரச்சினைகளை ஒத்திசைவுப் பரிமாணம் உள்ளடக்குகின்றது. கோட்பாடுகள் அத்துடன்/ அல்லது நியமங்கள் என்பன பொதுவாக உறுதிமொழி/ கணக்காய்வுக்கு உட்பட்டு ஒத்திசைவாக இப் பரிமாணத்தினை எடுத்துரைக்கின்றது.

செயற்றிறன் பரிமாணமானது தந்திரோபாயம் மற்றும் பெறுமான உருவாக்கம் என்பவற்றை மையமாகக் கொண்டது. தந்திரோபாயமான தீர்மானங்களை எடுப்பதற்கு, இடருக்கான சபையின் விருப்பு மற்றும் அடிப்படைச் செயற்றிறன் செலுத்திகளைப் புரிந்துகொள்வதற்கு அதற்கு உதவுவதாகவே மைய இலக்கு உள்ளது. சிறந்த கூட்டுரிமை ஆட்சியினால் தோல்வியினைத் தடுப்பதற்கு உதவ முடியும், ஆனால் சிறந்த வியாபாரச் செயற்றிறனுக்கு இது உத்தரவாதத்தினை வழங்காது என்னும் வாதமே தொழில்முயற்சி ஆட்சி சட்டகத்தில் பிரதானமாக உள்ளது. ஏற்கனவே பார்க்கப்பட்டுள்ளவாறு, 2000 ஆண்டுகளின்

முற்பகுதியில் கூட்டுரிமை ஆட்சி சமநிலைப் பக்கத்தினை மறுசீரமைப்பதற்கான குறிப்பிடத்தக்களவான முயற்சிகளுக்கு கூட்டுரிமைத் தோல்விகள் இட்டுச் சென்றன. ஆனால், மிக அண்மைக்காலம் வரையில், தந்திரோபாய தீர்மானம் எடுத்தல் மற்றும் அமுலாக்கம் குறித்து செயற்றிறன் பக்கம் மீது அதிக கவனம் இருந்திருக்கவில்லை. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நீண்டகால வெற்றிக்கு ஒத்திசைவு மற்றும் செயற்றிறன் இரண்டினதும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு தொழில்முயற்சி ஆட்சிச் சட்டகம் எமக்கு உதவுகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் வெளியிடப்படும் கூட்டுரிமை ஆட்சி நன் நடைமுறைக் கோவை, மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்கள் என்பவற்றை ஆதாரப்படுத்தி அதன் தொழில்முயற்சி ஆட்சியினை மேற்கொள்ளும் அதேவேளை ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை, சுதந்திரம், பொறுப்புக்கூறுதல், பொறுப்பு, நீதி மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற முக்கியமான கூட்டுரிமை ஆட்சிப் பெறுமானங்களை பின்பற்றி வருகின்றது.

### நிதி மற்றும் காப்புறுதி நுட்பத்திறன்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நிதி மற்றும் காப்புறுதி ஆற்றலானது பணிப்பாளர் சபை மற்றும் தவிசாளரின் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

### தே.கா.ந.பொ. நிதிய சபையின் உள்ளடக்கம்

நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்களை உள்ளடக்கியதும், நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், நிதி அமைச்சின் பிரதம கணக்காளர், சுகாதார அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், அரசாங்க நிர்வாக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அலுவலர், இலங்கை காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதி, வங்கியில், காப்புறுதி, முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் நிபுணத்துவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு

அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஏனைய மூன்று ஆட்கள் ஆகியோரை உள்ளடக்கியதுமான சபை ஒன்றின் மூலம் தே.கா.ந.பொ. நிதியம் முகாமை செய்யப்படுகின்றது. சபையின் ஆள் ஒருவரை தவிசாளராக நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கேற்ப, சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் – 2012 இன் சபை உறுப்பினர் பக்கத்தில் (page) பணிப்பாளர் சபையின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

### நன்நெறிக் கோட்பாடு

எமது வியாபார நடவடிக்கைகள் நடாத்தப்படும் ஒழுக்கம் மற்றும் தத்துவங்கள் தொடர்பிலான விசேட கடப்பாடுகளின் கீழ் சகல முகாமை மற்றும் அலுவலர் குழாமினையும் அமர்த்தும் ஒரு முறைசார்ந்த நன்நெறிக் கோட்பாட்டிற்கு அவர்கள் உட்பட வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை செயற்றிறன் மதிப்பீட்டின் போது தே.கா.ந.பொ. நிதிய ஊழியர்களின் நன்நெறிக் கோட்பாடு மதிப்பிடப்படுகின்றது.

### பெறுகைக் கொள்கை

பெறுகைச் செயற்பாடுகளில் உள்ளடங்கும் அலுவலர் குழாத்து உறுப்பினர்கள் மூலம் பின்பற்றப்பட வேண்டிய முழுமையான பெறுகைக் கொள்கை ஒன்றையும் இக் கம்பனியானது அறிமுகப்படுத்தியுள்ளது. தே.பெ.மு. (NPA) பெறுகை வழிகாட்டல் கைந்நூலின் அடிப்படையில் பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நிதிக் கூற்றுக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அதேபோல IBSL ஒழுங்குவிதிகள் என்பனவற்றுக்கு ஒத்திசைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அதன் நிதிக் கூற்றுக்களை அளித்தது. மதிநுட்பமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு

அக்கறைகொண்ட தரப்பினருக்கு ஒரு விரிவான மற்றும் வெளிப்படையான செயற்றிறன் பகுப்பாய்வு மற்றும் எதிர்கால தந்திரோபாயங்கள் என்பவற்றை தே.கா.ந.பொ. நிதியமானது வழங்கியது.

### வியாபார நன்நெறி மற்றும் வியாபார ஒழுக்கம்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அதன் ஊழியர்களின் நடத்தைக்கான சிறந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபார நன்நெறிகள் மற்றும் வியாபார ஒழுக்கம் என்பவற்றைப் பின்பற்றியது. பொது நடத்தை, ஒழுக்க வியாபார நியமங்கள் மற்றும் மோசடியற்ற நடத்தை, தே.கா.ந.பொ. நிதிய சொத்துக்களின் பாதுகாப்பும் முறையான பாவனையும், வட்டிக் குழப்பங்களைத் தவிர்த்தல், தே.கா.ந.பொ. நிதிய காப்புறுதி வாடிக்கையாளர்கள் மற்றும் சேவைப் பயன்பெறுனர்களுடன் தொடர்புகொள்ளும் போது நீதியாகத் தொடர்புகொள்ளுதல், தே.கா.ந.பொ. நிதிய கணனி முறைமைகளின் முறையான பாவனை, வாடிக்கையாளர் திருப்தி, சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான ஒத்திசைவு என்பவற்றை அவை உள்ளடக்குகின்றன.

### ஆண்டறிக்கை 2012

அறிவார்ந்த தீர்மானத்தினை மேற்கொள்வதற்கென 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ. நிதிய அலுவல்களின் ஓர் ஒட்டுமொத்த பார்வையினை மதிப்பிடுவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த அறிக்கை 2012 தயாரிக்கப்பட்டுள்ளது.

### தகவல் வழங்கல்

மாதாந்தச் செயற்றிறன் அறிக்கைகள், முன்னைய சபைக் கூட்ட அறிக்கைகள் மற்றும் சபைப் பத்திரங்கள் என்பன சபைக் கூட்டங்களிற்கு முன்பாகவே குறிப்பிடத்தக்க அளவிற்கு சபை உறுப்பினர்களுக்கு பரப்பப்படும். சபைத் தீர்மானங்களை எடுப்பதற்கென மாதாந்த அடிப்படையில் தவிசாளர் மற்றும் சபை கூடுகின்றது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 16 தடவைகள் சபை கூடியது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 5 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

### உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாட்டின் கம்பனி முறைமைக்கும் மற்றும் அதன் விளைதிறனை மீளாய்வு செய்வதற்கும் சபை பிரதானமாகப் பொறுப்பினைக் கொண்டிருக்கும். உள்ளகக் கட்டுப்பாட்டின் கம்பனி முறைமையின் விளைதிறனின் தொடர்ச்சியான மீளாய்வுகளை உள்ளகக் கணக்காய்வாளர்களும் முகாமையும் நடாத்துகின்றது. உள்ளகக் கணக்காய்வாளர்களின் முடிவுகளையும் அதேபோல உள்ளகக் கட்டுப்பாட்டின் கம்பனி முறைமையின் விளைதிறன் தொடர்பில் முகாமையினை குறைந்தபட்சம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவையேனும் கணக்காய்வுக் குழுவானது மீளாய்வு செய்வதுடன் அத்தகைய மீளாய்வுகள் தொடர்பில் சபைக்கு அறிக்கையிடுகின்றது.

திட்டங்கள் மற்றும் நோக்கெல்லை, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு மற்றும் அவசியமானவிடத்து கலந்துரையாடல் மற்றும் பிரச்சினைகளைக் கருத்திற்கொள்தல் மற்றும் முகாமை செய்தல், தே.கா.ந.பொ. நிதியத்தின் இடர் முகாமைத்துவத் தந்திரோபாயத்தினை மீளாய்வுசெய்தல் மற்றும் இடரினைத் தணிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல் மற்றும் உடன்படல், சகல நேரத்திலும் உள்ளக/ வெளியக கணக்காய்வாளர்களுடன் விளைதிறன் வாய்ந்த உறவினைப் பேணுதல், அவசியமானவிடத்து தே.கா.ந.பொ. நிதியத்துடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களைத் தனித்தனியாகச் சந்தித்தல்.

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியகக் கணக்காய்வானது கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்கள உள்ளகக் கணக்காய்வு மற்றும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியத்தின் கணக்காய்வு என்பன உள்ளங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளானவை உள்ளகக்

கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கணக்காய்வுக் குழு

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு 5 தடவைகள் கூடியது. சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான ஒத்திசைவு, நிதி அறிக்கையிடல், வெளியகக் கணக்காய்வு, ஒத்திசைவு மற்றும் வழக்கு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பவற்றை மையப்படுத்திய காப்புறுதித் திட்டங்களின் விளைதிறனை முகாமைசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உறுதி செய்வதற்கு கணக்காய்வுக் குழுவானது நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளது.

## கூட்டுரிமை ஆட்சி ஒத்திசைவு

| | |
|---|---|
| கூட்டுரிமை ஆட்சி தத்துவம் | தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலமான ஒத்திசைவு மட்டம் |
| தவிசாளர் மற்றும் பி.நி.அ. (CEO) | பி.நி.அ. இன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தவிசாளரிடம் அதிகாரத்தினை சபையானது கையளித்துள்ளது. |
| பொறுப்புக்களின் பிரிப்பு | தவிசாளரானவர் சபையின் தலைமைத்துவத்திற்குப் பொறுப்புடையவராவார். குறிப்பாக, அவர் பின்வருவனவற்றை ஆற்றுவார்:<br>• உயர்ந்தபட்ச கூட்டுரிமை ஆட்சி நியமங்களுடன் ஒத்திசைவாக சபையினதும் அதன் குழுக்களினதும் விளைதிறனான நடவடிக்கையினை உறுதிப்படுத்தல்.<br>• தந்திரோபாய விருத்தியில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு உதவுதல், மற்றும் கூடுதல் பரந்துபட்ட ரீதியில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு உதவுதலும் ஆலோசனை வழங்குதலும். திணைக்களத் தலைவர்கள் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்திற்குப் பொறுப்பாகவிருப்பர் என்பதுடன் சபையினால் கையளிக்கப்படும் அதிகாரங்களுக்குள் அதனை முகாமை செய்வர், குறிப்பாக, அவர் பின்வருவனவற்றை ஆற்றுவார்:<br>• சபைக்குப் பரிந்துரைப்பதற்கான தந்திரோபாய முன்மொழிவுகளை விருத்தி செய்தல் மற்றும் உடன்பட்ட தந்திரோபாயங்கள் வியாபாரத்தில் பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.<br>• வருடாந்த திட்டங்களை விருத்தி செய்தல், ஆதரவுக்காக சபையிடம் அளிப்பதற்காக உடன்பட்ட தந்திரோபாயங்களுடன் உறுதியாக இருத்தல். |

| | |
|---|---|
| | • நிறுவனமானது அதன் திட்டங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான ஆற்றலினையும் வளத்தினையும் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான மனித வளமிடலைத் திட்டமிடுதல்.<br>• வினைத்திறனான வள ஒழுங்கமைப்பினை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனக் கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் மற்றும் செய்முறைகளையும் முறைமைகளையும் உருவாக்குதல்.<br>• உடன்பட்ட திட்டங்கள், தந்திரோபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக வியாபாரச் செயற்றிறனிற்காக சபைக்குப் பொறுப்பாக இருத்தல்.<br>• செயற்றிறன்  தொடர்பு விருத்தி மற்றும் மதிப்பீடுகள் உள்ளடங்கலாக நிறைவேற்றுக் குழுவினை வழிநடாத்துதல்.<br>• முதலீட்டு வருவாய்களை மேற்பார்வை செய்தல். |
| பெறுகைக் குழுக்கள் | திணைக்கள மட்டத்தில் உருவாக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு எதுவுமில்லை. பெறுகைப் பெறுமதியின் அடிப்படையில் சிறிய அல்லது பாரிய பெறுகைக் குழுக்கள் விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளன. |
| கணக்காய்வுக் குழு | கணக்காய்வுக் குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கணக்காய்வுக் குழுவானது, அது பொறுப்பினைக் கொண்டிருக்கும் நிதி மற்றும் நிர்வாகத்தில் ஒரு முக்கியமான வகிபாகத்தினை வகிக்கின்றது. கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திலிருந்தான சிரேஸ்ட அலுவலர் ஒருவர் குழுக் கூட்டங்களிற்கு அவதானிப்பாளர் ஒருவராக பங்குபற்றுவார்.<br>• **கணக்காய்வுக் குழு**<br>2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழுவானது பின்வரும் கணக்காய்வு நோக்கெல்லையினை உருவாக்கியது. |

| | |
|---|---|
| | 1. உள்ளக கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை வரையறுத்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.<br>2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளிற்காகவும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தலும் மதிப்பிடுதலும்.<br>3. செலவு விளைதிறனுக்காக ஒழுங்கான இடைவெளியில் செயற்றிறனை மீளாய்வு செய்தல் மற்றும் விரய செலவினம் போன்றவற்றை நீக்குதல்.<br>4. வெளியக கணக்காய்வாளருடன் தொடர்புகொள்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தினது/ வெளியக கணக்காய்வாளரது முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.<br>5. நியதிச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றுடன் இயைந்தொழுகின்றதா என்பதை உறுதிப்படுத்தல்.<br>6. கணக்கீட்டு நியமங்களுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துவதற்கு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.<br>7. உள்ளக கணக்காய்வு/ வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், தீர்வு நடவடிக்கைக்கான முகாமைத்துவக் கடிதம் என்பவற்றை மீளாய்வு செய்தல்.<br>8. அரச தொழில்முயற்சிகள் குழுவினது பரிந்துரை/ வழிகாட்டல்களின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.<br>2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுக் குழு 5 தடவைகள் கூடியது. சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடனான ஒத்திசைவு, நிதி அறிக்கையிடல், வெளியகக் கணக்காய்வு, ஒத்திசைவு மற்றும் வழக்கு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பவற்றை மையப்படுத்திய காப்புறுதித் திட்டங்களின் விளைதிறனை முகாமைசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உறுதி செய்வதற்கு கணக்காய்வுக் குழுவானது நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளது. |
| | |

| | |
|---|---|
| சபைக் கூட்டங்கள் | 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 16 சபைக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் கூட்டத்தில் மிகச் சிறப்பான வரவுப் பதிவுகளை சபை உறுப்பினர்கள் பேணியிருந்தனர். சபைக் கூட்டங்களில் கலந்துகொண்ட சபை உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு தரப்பட்டுள்ளது;<br><br>நியமனத் திகதி கலந்துகொண்ட கூட்டங்களின் எண்.<br><br>திரு. எஸ்.டி. அபேகுணசேகர 10.05.2010 03<br>தவிசாளர்<br><br>திரு. டி. விதானகமாச்சி 09.10.2012 05<br>தவிசாளர்<br><br>கலாநிதி. எல். சமரவிக்ரம 11.06.2010 16<br>சபை உறுப்பினர்<br><br>திரு. ஏ.கே. செனெவிரத்ன 08.07.2011 16<br>சபை உறுப்பினர்<br><br>திரு. என். குலசேகர 18.07.2011 16<br>சபை உறுப்பினர்<br><br>திரு. ஜே. தடல்லகே 23.06.2010 10<br>சபை உறுப்பினர்<br><br>திரு. டபிள்யூ. எச். பியதாச 10.07.2010 13<br>சபை உறுப்பினர்<br><br>நல்லாட்சி நடைமுறைகளுக்கான தமது அர்ப்பணிப்பில் உயர் ஒழுக்க விழுமியங்கள் மற்றும் பொறுப்புக்கூறலுடன் தமது கடமைகளைப் புரிவதற்கு சபை உறுப்பினர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. சிறந்த |

| | |
|---|---|
| | கூட்டுரிமை ஆட்சி முறைமையின் கூறுகளாக வலுவான வியாபார ஒழுக்கங்கள், சிறந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், விளைதிறன் மற்றும் வினைத்திறன் கொண்ட கண்காணிப்பு முறைமைகள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. |
| பொறுப்புகூறல் மற்றும் கணக்காய்வு | அனுமதிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு பொருத்தமான விதத்தில் வியாபாரம் நடாத்தப்படுகின்றது என்றும் நிறுவனத்தின் நிதி மற்றும் பௌதீக இலக்குகள் அடையப்படுகின்றது என்றும் உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தின் அக்கறைகொண்ட தரப்பினருக்கு பொறுப்புக்கூறக்கூடியதாக இச் சபை உள்ளது. |
| நிதி அறிக்கை | உரிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் விதித்துரைக்கப்பட்டவாறு அரசாங்கத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு ஒத்திசைவாக தே.கா.ந.பொ. நிதிய சபையின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது என்பதை சபை உறுதிப்படுத்துகின்றது.<br><br>• **ஆண்டறிக்கை 2012**<br>அறிவார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கென 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.கா.ந.பொ.நிதிய அலுவல்களின் ஒட்டுமொத்தமான ஒரு மதிப்பீட்டினை வழங்கும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கை 2012 தயாரிக்கப்பட்டுள்ளது.<br>• **நிதிக் கூற்றுக்கள்**<br>தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் ஒத்திசைவாக அதன் நிதிக் கூற்றுக்களை அளித்துள்ளது. |

# 8. ஆட்சியினை அறிக்கையிடல் – தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம்

## அறிமுகம்

தொழில்முயற்சி இடர் முகாமைத்துவமானது ஏதேனும் அமைப்பின் தந்திரோபாய முகாமைத்துவத்தின் மத்திய பகுதியாகும். அமைப்புக்களானவை அவற்றின் செயற்பாடுகளுடன் இணைந்திருக்கும் ஆபத்துக்களை முறைமையாக எடுத்துரைக்கும் செய்முறையே இதுவாகும். ஒரு வெற்றிகரமான இடர் முகாமைத்துவ முன்னெடுப்பானது அமைப்பிலுள்ள ஆபத்து மட்டத்திற்கு வீதாசாரமாகவும், ஏனைய கூட்டுரிமைச் செயற்பாடுகளுடன் இணைக்கப்பட்டும், அதன் நோக்கெல்லையில் முழுமையாகவும், நாளாந்த செயற்பாடுகளில் உறுதியாக இணைக்கப்பட்டும் மற்றும் மாற்றமுறும் சூழ்நிலைகளுக்கு எதிர்விளைவைக் காட்டி முனைப்பாகவும் இருத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவத்தின் மையக் கருத்தானது முக்கியமான இடர்களை மதிப்பிடுதலும் பொருத்தமான இடர் எதிர்விளைவினை அமுலாக்குவதும் ஆகும். அமைப்பின் சகல செயற்பாடுகளிலிருந்தும் ஆகக்கூடிய நிலைத்து நிற்கும் பெறுமதியினை அடைந்துகொள்வதே நோக்கமாகும். அமைப்பு ஒன்றினைப் பாதிக்கக்கூடிய காரணிகளின் சாத்தியமான நன்மை தீமைகளைப் புரிந்துகொள்வதை இடர் முகாமைத்துவம் மேம்படுத்துகின்றது. இது வெற்றி வாய்ப்பினை அதிகரிப்பதுடன் தோல்வி வாய்ப்பு மற்றும் அமைப்பின் நோக்கங்களை அடைந்துகொள்வதுடன் இணைந்த நிச்சயமற்ற தன்மை மட்டம் இரண்டையுமே குறைக்கின்றது.

இடர் ஒன்றினைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு முக்கியமான பகுதியானது இடர் தாக்கத்தின் தன்மை, மூலம் அல்லது வகையினை வரையறுப்பதாக இருக்கும். இவ் வழியிலான இடர் மதிப்பீடானது இடர் வகைப்பாட்டு முறைமை ஒன்றின் பயன்பாட்டின் மூலம் முன்னேற்றப்படலாம். இடர் வகைப்பாட்டு முறைமைகள் முக்கியமானவை ஏனெனில் ஓர் அமைப்பு ஒத்த இடர்களின் திரட்சியினை இனங்காண்பதற்கு அவை உதவும். எந்தெந்த தந்திரோபாயங்கள், சாமர்த்தியங்கள் மற்றும் தொழிற்பாடுகள் கூடுதல் பலவீனமாகவுள்ளன என்பதை இனங்காண்பதற்கும் ஓர் இடர் வகைப்பாட்டு முறைமையானது அமைப்பு ஒன்றிற்கு உதவும். இடர் வகைப்பாட்டு முறைமைகள் வழமையாக நிதிக் கட்டுப்பாடு, தொழிற்பாட்டு வினைத்திறன், நன்மதிப்பு வெளிப்பாடு மற்றும் வணிகச் செயற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட இடர்ப் பிரிவின் அடிப்படையில் அமைந்துள்ளன. எனினும், சகல வகையான அமைப்புக்களுக்கும் உலகளாவிய ரீதியில் ஏற்புடையதான இடர் வகைப்பாட்டு முறைமை எதுவுமில்லை.

ஓர் இடர் முகாமைத்துக் கொள்கையானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குதல் வேண்டும்:

- இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்கங்கள் (ஆட்சி)

- இடருக்கான அமைப்பின் அணுகுமுறைக் கூற்று (இடர் தந்திரோபாயம்)
- இடர் விழிப்பூட்டல் கலாசாரம் அல்லது கட்டுப்பாட்டு சூழலின் விவரம்
- ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர் மட்டமும் தன்மையும் (இடருக்கான விருப்பு)
- இடர் முகாமை அமைப்பு மற்றும் ஒழுங்குகள் (இடர் வடிவமைப்பு)
- இடரை இனங்காணுதல் மற்றும் தரப்படுத்தலுக்கான நடைமுறைகளின் விபரங்கள் (இடர் மதிப்பீடு)
- இடரைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடலுக்கான ஆவணமாக்கல் பட்டியல் (இடர் நெறிமுறை)
- இடர் தணிப்புத் தேவைப்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் (இடர் எதிர்விளைவு)
- இடர் முகாமை வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை ஒதுக்கீடு செய்தல்
- இடர் முகாமைப் பயிற்சித் தலைப்புக்கள் மற்றும் முன்னுரிமைகள்
- இடர் கண்காணிப்பு மற்றும் நியமத் தர மதிப்பீட்டிற்கான தகுதி விதிகள்
- இடர் முகாமைத்துவத்திற்கான பொருத்தமான வளங்களை ஒதுக்கீடு செய்தல்
- எதிர்வரும் ஆண்டுக்கான இடர் செயற்பாடுகள் மற்றும் இடர் முன்னுரிமைகள்

| இடர் | இடரின் தன்மை | நடவடிக்கைகள் |
|---|---|---|
| 01. தந்திரோபாய இடர் | தந்திரோபாய இடர் என்பது ஏற்படுத்தப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான இயலாமை மற்றும் வெளியக மற்றும் உள்ளக சுற்றாடலில் ஏற்படும் எதிர்பாராத மாற்றங்கள் காரணமாக தொடர்பற்றதாக அல்லது பொருத்தமற்றதாக மாறும் | பொதுச் சூழல் அதேபோல போட்டியாளர் மற்றும் வாடிக்கையாளர் வலு என்பவற்றில் அரசியல், தொழில்நுட்ப, சமூக கலாசார, பொருளாதார அபிவிருத்திகளை கண்காணித்ததன் பின்னர் கூட்டுரிமைத் திட்டத் தயாரிப்பின் மூலம் இது முகாமை செய்யப்படுகின்றது. சாத்தியமான இடர்களை எடுத்துரைத்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான திட்டங்களை உள்ளடக்கி முகாமைத்துவக் |

| | | |
|---|---|---|
| | கூட்டுரிமைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டங்கள் தொடர்பான இடர் என்பவற்றைக் குறிப்பிடுகின்றது. | குழுவினால் ஒவ்வொரு வருடமும் கூட்டுரிமைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதுடன் அதன் பின்னர் அது ஒரு விரிவான மீளாய்வின் பின்னர் சபையினால் அனுமதிக்கப்படுகின்றது. |
| 02.நன்மதிப்பு இடர் | தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிப்பிட்ட நிகழ்வுகள் மற்றும் நடத்தைகள் காரணமாக கூட்டுரிமை மதிப்பு மற்றும் நன்மதிப்பானது குறிப்பிட்ட நிகழ்வு மற்றும் நடத்தை ஒன்றின் காரணமாக குறைவடைகின்றது. | ஏதேனும் சாத்தியமான இடர் முன்கூட்டியே இனங்காணப்பட்டு போதுமானளவு எடுத்துரைக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, IBSL மற்றும் மத்திய வங்கி, கைத்தொழிலுள்ள ஏனைய செயற்படுநர்கள் மற்றும் ஏனைய சகல அக்கறைகொண்ட தரப்பினர் போன்ற ஒழுங்குபடுத்துனர்களுடன் சிறந்த உறவுகள் முகாமையினால் பேணப்படுகின்றது. பொதுமக்களுக்கான சகல நிதித் தகவல்களினதும் வெளியீடானது தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் மூலமான அனுமதிக்கு உட்பட்டுள்ளது. |
| 03.ஒத்திசைவு வியாபார இடர் | தே.கா.ந.பொ. நிதியத்தின் வாடிக்கையாளர்கள், அலுவலர் குழாம் மற்றும் ஏனைய அக்கறைகொண்ட தரப்பினர் ஆகியோரை பாதகமாகப் பாதிக்கும் உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், உள்ளக கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அல்லது ஒழுக்க நியமங்கள் என்பவற்றுடன் ஒத்திசைவதற்கான தோல்வியின் (அல்லது | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு போன்ற பல்தரப்பட்ட அரச அமைப்புக்களின் மூலம் விதித்துரைக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதன் மூலம் தே.கா.ந.பொ. நிதியமானது ஒத்திசைவு இடரினைக் குறைத்துள்ளது. |

| | | |
|---|---|---|
| | உணர்ந்துகொள்ளும் தோல்வியின்) விளைவாக வியாபாரம் தடைப்படல், வியாபார நடவடிக்கைகளுக்கான தடங்கல் மற்றும் தே.கா.ந.பொ. நிதியத்தின் நன்மதிப்பு பாதிப்பு என்பவற்றின் இடராக இருத்தல். | |
| 04.சர்வதேச இடர் | சர்வதேச சமூக–கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் காரணிகளிலிருந்தான மாற்றங்களிலிருந்து எழும் இடரினை சர்வதேச இடர் குறிக்கின்றது. தே.கா.ந.பொ. நிதியமானது மீள்காப்புறுதி மற்றும் வெளிநாட்டுத் தொழில் காப்புறுதி என்பவற்றில் ஈடுபட்டுள்ளதால் சர்வதேச பெஸ்ரல் (PESTEL) காரணிகள் தே.கா.ந.பொ. நிதியத்தினைப் பாதிக்கின்றன. | இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் குவிந்துள்ள மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் போக்கினைக் கண்காணிப்பதன் மூலமும் அதேபோல தே.கா.ந.பொ. நிதியத்தின் மீள்காப்புறுதித் துறையுடன் தொடர்புபட்ட சர்வதேச வியாபாரப் போக்குகளை கண்காணிப்பதன் மூலமும் இவ் இடரினை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது குறைக்கின்றது. |
| 05.காப்புறுதி உத்தரவாத இடர் | கோரிக்கைத் தொகை இடருக்கான ஏற்றுக்கொள்ள முடியாத உயர்ந்த வெளிப்படுத்தலைக் கொண்டுவரும் காப்புறுதி வியாபாரத்தினை ஏற்றுக்கொள்தல் மற்றும் போதுமான இடர் தவணைக் கட்டணத்தினை உள்ளடக்காத வீதத்தில் இடரினை | இவ் இடரினைக் குறைப்பதற்கு தவணைக் கட்டண வரையறுப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பரம்பல் வலையமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளவர்களையும் உள்ளடக்கி உத்தரவாத மற்றும் கோரிக்கைத் தொகை முகாமைத்துவ அலுவலர் குழாத்தின் பயிற்சி மற்றும் |

| | | |
|---|---|---|
| | ஏற்றுக்கொள்தல் என்பவற்றை இது குறிக்கின்றது. | அபிவிருத்திக்காக குறிப்பிடத்தக்களவான முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 06.அந்நியச் செலாவணி பரிமாற்று இடர் | டொலர், ஸ்ரேலிங் பவுண்ட், யூரோ போன்ற பல்வேறுபட்ட செலாவணிகளுடன் அந்நியச் செலாவணி வீதங்களின் தளம்பல்கள் காரணமாக நிகழும் பாதகமான தாக்கங்களினை அந்நியச் செலாவணி இடர் குறிக்கின்றது. | இவ் இடரினைக் குறைப்பதற்கு மீள்காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்காக உள்நாட்டு நாணயப் பெறுமதிகளில் கூடுதலான மீள்காப்புறுதி உடன்படிக்கைகள் ஒப்பந்தஞ் செய்யப்பட்டுள்ளன. |
| 07.த.தொ. (IT) இடர் | த.தொ. (IT) இடரானது தே.கா.ந.பொ. நிதியத்தின் தரவு மற்றும் தற்போதய தகவல்கள் என்பவற்றிலிருந்து எழுகின்றது. த.தொ. இடர் தணிப்புத் திட்ட அமுலாக்கத்தின் மூலம் தே.கா.ந.பொ. நிதியம் இதனைக் கணக்கிடுகின்றது. | உட்கட்டமைப்பு மற்றும் தரவுத்தள அம்சங்கள் இரண்டின் மூலமும் தகவல் பாதுகாப்பு, பிரதி தகவல்கள் (redundancy) மற்றும் கிடைப்பனவுத் தன்மை என்பன அடைந்துகொள்ளப்படுகின்றன.<br>துல்லியமான நடைமுறை த.தொ. (IT) சேவைகளை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு, சிற்றளவான பேரிடர் மீள்காப்பு திட்ட அமுலாக்கத்துடன் வைரஸ் தடுப்பு (antivirus) மற்றும் நகலாக்க (backup) தீர்வுகள் போன்ற சேவைகளை த.தொ. (IT) திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. |

| | | |
|---|---|---|
| 08.கடன் இடர் | எதிர் தரப்பினர் தமது கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு தவறுவதன் அல்லது தோல்வியுறுவதன் காரணமாக கம்பனிக்கு ஏற்படும் சாத்தியமான நிதி இழப்பின் நிகழ்வாக கடன் இடர் உள்ளது.<br>தே.கா.ந.பொ. நிதியமானது அதன் முதலீடுகள் மற்றும் மென் (soft) கடன்கள் மூலம் கடன் இடருக்கு உட்படுகின்றது. | மீள்காப்புறுதி வருமதிகள் உள்ளடங்கலாக சகல வருமதிகளும் மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன் மீள்பெறுவனவுகள் உரிய நேரத்தில் செய்யப்படுதல்.<br><br>தே.கா.ந.பொ. நிதியச் சட்டமானது அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்வதற்கு மட்டுமே தே.கா.ந.பொ. நிதியத்தினை அனுமதிப்பதனால் திறைசேரி உண்டியல்கள், REPOs மற்றும் திறைசேரி முறிகள் போன்ற அரச வங்கிகளிலுள்ள இடர் அற்ற முதலீடுகளின் மூலம் இவ் இடர் முகாமை செய்யப்படுகின்றது. |
| 09.கோரிக்கைத் தொகைத் தீர்ப்பனவு இடர் | மோசடி, சட்ட மற்றும் தொழில்நுட்பக் காரணிகளின் காரணமாக எழும் சாத்தியமான பிணக்கு இடர். | கோரிக்கைத் தொகைகளை அனுமதித்தல் மற்றும் கோரிக்கைத் தொகைகளைச் செய்முறைப்படுத்துதலில் கடமைகளைப் பகுத்தல் என்பவற்றில் கடுமையான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதனூடாக மோசடி, சட்ட மற்றும் தொழில்நுட்பக் காரணிகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. |

# 9. நிதிக் கூற்றுக்கள் -2012

# வருமானக் கூற்று

**தேசிய காப்புறுதிநம்பிக்கைப்பொறுப்புநிதியம்**

**வருமானக்கூற்று** *(சகல பெறுமானங்களும்இலங்கைரூபாவில்)*

*டிசெம்பர்31 ஆம் திகதியில்முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | குறிப்புக | 2012 அக்ரஹாரமற்றும் ஏனைய | 2012 சி.கொ.ப.நி. (SRCC | 2012 மொத்தம் | 2011 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| தேறிய ஈட்டப்பட்ட பங்குப்ப | 01 | 837,526,229 | 2,185,221,592 | **3,022,747,821** | 2,488,711,994 |
| அக்ரஹார பங்களிப்பு | 02 | 863,435,521 | - | **863,435,521** | 1,117,653,037 |
| **நன்மைகளும்நட்டங்களும்செலவினங்களும்** | | | | | |
| காப்புறுதி உரிமைக்கோரல்க | 03 | (1,898,258,796) | (383,211,955) | **(2,281,470,751)** | (1,879,486,696) |
| | | (197,297,047) | 1,802,009,637 | **1,604,712,590** | 1,726,878,335 |
| **வேறு வருமானம்** | | | | - | - |
| முதலீட்டு வருமானம் | | 84,627,761 | 531,185,783 | **615,813,544** | 723,412,241 |
| கடன் வட்டி | | - | 7,278,316 | **7,278,316** | 10,163,846 |
| வேறு வருமானம் | | 18,732,336 | 153,846 | **18,886,182** | 743,614 |
| | | 103,360,097 | 538,617,945 | **641,978,043** | 734,319,701 |
| **செலவினம்** | | | | - | - |
| அலுவலர் குழாம் சார்ந்த கிர | 04 | 69,828,165 | 2,178,544 | **72,006,709** | 56,000,854 |
| நிர்வாகச் செலவுகள் | 05 | 50,237,624 | 24,164,860 | **74,402,484** | 68,915,550 |
| நிதி மற்றும் ஏனைய செலவு | 06 | 3,666,682 | 13,591,592 | **17,258,273** | 21,581,925 |
| **மொத்தச்செலவினம்** | | 123,732,470 | 39,934,997 | **163,667,466** | 146,498,329 |
| **வரிக்குமுன்னரானஉழைப்பு** | | (217,669,420) | 2,300,692,586 | **2,083,023,166** | 2,314,699,707 |
| **வரி விதித்தல்** | | - | - | - | 108,349,446 |
| **வரிக்குப்பின்னரானஉழைப்பு** | | **(217,669,420)** | **2,300,692,586** | **2,083,023,166** | **2,206,350,261** |

# ஐந்தொகை

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஐந்தொகை *(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு*

| | குறிப்புக்ளர | 2012 மற்றும் ஏனை | 2012 SRCC & Tr. | 2012 மொத்தம் | 2011 மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 07 | 21,414,642 | 3,324,560 | **24,739,202** | 29,606,877 |
| முதலீடுகள் | 08 | 969,761,256 | 4,406,153,417 | **5,375,914,672** | 4,444,546,262 |
| | | 991,175,898 | 4,409,477,976 | **5,400,653,874** | 4,474,153,140 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| வருமதிகள் | 09 | 240,641,969 | 1,424,005,867 | **1,664,647,836** | 1,927,814,565 |
| காசும் காசுக்குச் சமனானதும் | 10 | 94,964,525 | 8,676,871 | **103,641,397** | 3,542,969,945 |
| | | 335,606,495 | 1,432,682,738 | **1,768,289,233** | 5,470,784,510 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,326,782,393 | 5,842,160,715 | **7,168,943,107** | 9,944,937,649 |
| **உரிமை முதலும் பொறுப்புக்களும்** | | | | | |
| **உரிமை முதல்** | | | | | |
| திரண்ட நிதியம் | 11 | 1,078,401,750 | 4,834,516,767 | **5,912,918,517** | 8,497,449,707 |
| | | 1,078,401,750 | 4,834,516,767 | **5,912,918,517** | 8,497,449,707 |
| **தொழில்நுட்ப ஒதுக்குகள்** | | | | | |
| ஈட்டப்படாத பங்குப்பணம் | 12 | - | 1,059,398,308 | **1,059,398,308** | 963,443,837 |
| பிற்போடப்பட்ட தரகு | 13 | - | (176,532,688) | **(176,532,688)** | (161,486,715) |
| | | - | 882,865,620 | **882,865,620** | 801,957,122 |
| **பொறுப்பு** | | | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | | | |
| அரசாங்க கொடை | | 66,960 | - | **66,960** | 142,150 |
| செலுத்தப்படற்பாலதான இலாபத் தரகு | 14 | - | 12,287,375 | **12,287,375** | 12,287,375 |
| | | 66,960 | 12,287,375 | **12,354,335** | 12,429,525 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்தப்படற்பாலதான உரிமைக்கோரிக்கை | 15 | 206,295,040 | 79,783,010 | **286,078,050** | 392,410,772 |
| ஏனைய சென்மதிகள் | 16 | 42,018,643 | 32,707,942 | **74,726,585** | 240,690,522 |
| | | 248,313,682 | 112,490,953 | **360,804,635** | 633,101,294 |
| மொத்த உரிமை முதலும் பொறுப்பும் | | 1,326,782,392 | 5,842,160,715 | **7,168,943,107** | 9,944,937,649 |

இந் நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் ஒத்திசைகின்றது என்பதை நான் இத்தால சான்றுப்படுத்துகின்றேன்.

நிதி முகாமையாளர்

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அளிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையது.

சபையின் சார்பில் ஒப்பம் 1. ..............................

2. ..............................

# திரட்டு நிதிய மாற்றக் கூற்று

(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2012 | 2012 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | ரர மற்றும் ஏனை | SRCC & Tr. | மொத்தம் | |
| **திரண்ட நிதியம்** | | | | |
| திரண்ட நிதியம் | 1,713,638,127 | 6,783,811,581 | **8,497,449,708** | 9,695,467,155 |
| கழிப்பனவு- முன்னைய ஆண்டு | (243,245,409) | (200,301,466) | **(443,546,875)** | (17,717,155) |
| திரட்டு நிதியத்திற் | | (4,200,000,000) | **(4,200,000,000)** | (3,495,000,000) |
| திறைசேரியிலிருந் | (174,321,548) | | **(174,321,548)** | |
| கூட்டுதல்- மீள்காப்புறுதிச் செல | | 150,314,066 | **150,314,066** | |
| செலவிலுங்கூடிய வருமானம் | (217,669,420) | 2,300,692,586 | **2,083,023,166** | 2,314,699,707 |
| | 1,078,401,750 | 4,834,516,767 | **5,912,918,517** | 8,497,449,707 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

**காசுப் பாய்ச்சற் கூற்று** *(சகல பெறுமானங்களும் இலங்கை ரூபாவில்)*

*டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது*

| | 2012 | 2011 |
|---|---|---|
| ***தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்*** | | |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | **2,083,023,166** | 2,314,699,707 |
| கழிப்பனவு: முன்னைய வருட சீராக்கம் – வரிவிதிப்பனவு | **(443,546,875)** | (17,717,155) |
| கழிப்பனவு: திரட்டு நிதியத்துக்கான பங்களிப்பு | **(4,200,000,000)** | (3,495,000,000) |
| கழிப்பனவு: முன்னைய ஆண்டுச் சீராக்கம் – திறைசேரி வருமதி பதிவழிப்புக்கள் | **(174,321,548)** | |
| கூட்டுதல்: முன்னைய ஆண்டுச் சீராக்கம் – மீள் காப்புறுதி | **150,314,066** | |
| | **(2,584,531,191)** | (1,198,017,448) |
| ***சீராக்கங்கள்:*** | | |
| தேய்மானம் | **10,820,514** | 12,182,858 |
| PPE விற்பனை நட்டம் | **1,731,806** | - |
| முதலீட்டு வருமானம் | **(615,813,544)** | (723,412,241) |
| ஈட்டப்படாத பங்குப்பண வருமானம் | **95,954,471** | 141,879,032 |
| பிற்போடப்பட்ட தரகு | **(15,045,973)** | (21,741,415) |
| ***தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்*** | **(3,106,883,918)** | (1,789,109,214) |
| வருமதிகளில் குறைவு/ (அதிகரிப்பு) | **263,166,729** | 18,001,331 |
| சென்மதி உரிமைக் கோரல்களில் குறைவு | **(106,332,722)** | (125,589,435) |
| அரச கொடையில் குறைவு | **(75,190)** | (142,180) |
| ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு | **(165,963,938)** | (1,574,828) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **(3,116,089,038)** | (1,898,414,326) |
| ***முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்*** | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கொள்வனவுகள் | **(8,154,600)** | (5,693,724) |
| சொத்து அகற்றல் நடவடிக்கைகள் | **469,956** | |
| அரச ஆவணங்களிலிருந்தான (முதலீட்டு) விடுவிப்புக்கள் | **(931,368,410)** | 1,129,561,201 |
| முதலீட்டு வருமானம் | **615,813,544** | 723,412,241 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு** | **(323,239,510)** | 1,847,279,718 |
| **காசும் காசுக்குச் சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **(3,439,328,548)** | (51,134,608) |
| **காலப்பகுதியின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும்** | **3,542,969,945** | 3,594,104,553 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்குச் சமனான விடயங்களும்** | **103,641,397** | 3,542,969,945 |
| ***காசும் காசுக்குச் சமனான விடயங்களின் பகுப்பாய்வு*** | | |
| கையிலுள்ள காசும் வங்கி மீதியும் | **103,641,397** | 303,644,906 |
| குறுங்கால முதலீடுகள் | - | 3,239,325,039 |
| காசும் காசுக்குச் சமனான விடயங்களும் | **103,641,397** | 3,542,969,945 |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

1.0 **கூட்டுரிமைத் தகவல்**

“2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்” மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது (“இந் நிதியம்”) உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. இக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல. 97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம் முகவரியிலேயே அமைந்துள்ளது.

## 2.0 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

### 2.1 தயாரிப்பு அடிப்படை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க வரலாற்றுக் கிரயத் தத்துவத்தின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா.) தரப்பட்டுள்ளன.

பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கம் எதுவும் இக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பொருத்தமானவிடத்து, கணக்கீட்டுக் கொள்கைகளானவை அடுத்து வரும் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளன.

### 2.2 ஒப்பீட்டுத் தரவுகள்

கணக்கீட்டுக் கொள்கைகள் இந் நிதியத்தினால் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதுடன் முன்னைய வருடத்தில் பாவிக்கப்பட்டவற்றுடன் ஒத்திசைந்தும் உள்ளன. ஆண்டின் அளிக்கைக்கு சாத்தியப்படும் இடமெல்லாம் முன்னைய வருட தரவுகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

### 2.3 மூலதன ஈடுபாடு

ஐந்தொகை திகதியிலுள்ளவாறு எவ்வித மூலதன ஈடுபாடும் இல்லை.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

**2.4 காசுப் பாய்ச்சல் கூற்று**

“மறைமுக முறையினை” பாவித்து காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

**2.5 தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் எவையுமில்லை.

**2.6 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகளின் சகல விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களிலுள்ள உரிய குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**2.7 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்**

**2.7.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன சொத்துக்களை அதன் உத்தேச பாவனைக்காக அதன் தொழிற்படு நிலைக்கு கொண்டுவருவதில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளையும் சேர்த்து கொள்வனவுக் கிரயமாக உள்ளது.

நிதியத்தினைத் தொடர்வதற்காக நிரந்தர தன்மையில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்படும் செலவினம்.

**பெறுமானத் தேய்வு**

சகல ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றினதும் கிரயத்தின் பேரில் நேர்கோட்டு முறையினைப் பாவிப்பதன் மூலம் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு அத்தொகையினைப் பதிவழிப்பதற்கென பெறுமானத் தேய்வேற்பாடு பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 வருடத்திற்கு |
| தளபாடமும் பொருத்துக்களும் | 08 வருடத்திற்கு |
| அலுவலக உபகரணங்கள் | 06 வருடத்திற்கு |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடத்திற்கு |

# கணக்கீட்டுக் கொள்கைகள்

**2.7.2 முதலீடுகள்**

முதலீடுகள் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

**2.7.3 வருமதிகள்**

தவணைக் கட்டணங்கள், வட்டி மற்றும் ஏனைய வருமதிகளைச் சேகரிக்கும் ஆற்றல் தொடர்ந்துசெல்லும் மீதி முறையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. சேகரிக்கப்பட முடியாதவை என அறியப்படும் கடன்படுநர் மற்றும் ஏனைய வருமதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளன. தவணைக் கட்டணம், வட்டி மற்றும் ஏனைய வருமதிகளைச் சேகரிக்கும் ஆற்றலானது தொடர்ந்து செல்லும் மீதி முறையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. சேகரிக்கப்பட முடியாத கடன்படுநர்கள், ஏனைய வருமதிகள் பதிவழிக்கப்பட்டுள்ளன.

**2.7.3 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்**

காசும் காசுக்குச் சமமான விடயங்களும் கையிலுள்ள காசு, காசுப் பாய்ச்சற் கூற்று நோக்கத்திற்காக வங்கியிலுள்ள கேள்வி வைப்பு என வரையறுக்கப்படுகின்றது. காசும் காசுக்குச் சமமான விடயங்களும் கையிலுள்ள காசு, வங்கி மேலதிகப்பற்றில் நிலுவையாக இருக்கும் வங்கி வைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**2.8 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடு**

**2.8.1 ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள்**

ஐந்தொகைத் திகதிக்கு அடுத்து இடர் காலப்பகுதியுடன் தொடர்புற்ற வருடம் ஒன்றில் ஈட்டிய தவணைக் கட்டணத்தின் அவ் விகிதசமமாக ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் உள்ளன. மொத்த தவணைக்கட்டணத்தின் 24 ஆவது அடிப்படையில் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் கணிப்பிடப்படுகின்றது.

**2.8.2 ஒத்திவைக்கப்பட்ட தரகு**

ஈட்டப்படாத தவணைக் கட்டணத்துடன் தொடர்புறும் தேறிய தரகினையே ஒத்திவைக்கப்பட்ட தரகு குறிக்கின்றது.

**2.8.3 இலாபத் தரகு**

இலாபத் தரகானது இரண்டு தவணைக் கட்டணங்களாக கணிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்படுகின்றது. கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் ஆறு மாதங்களுக்குப்

பின்னர் முதல் தவணைக் கட்டணமும் கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குப் பின்னர் இரண்டாம் தவணைக் கட்டணமும் செலுத்தப்படுகின்றது.

### 2.8.4செலுத்தப்பட வேண்டிய கோரிக்கைத் தொகைகள்

உரிய நிதியாண்டில் செலுத்தப்படாத உரிமைக்கோரிக்கைகளான அனுமதிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளையும் மீள்காப்புறுதி மற்றும் எஞ்சியுள்ள அறவிடல்களுக்காக செய்யப்பட்ட தொடர்புபட்ட செலவினங்கள் மற்றும் கழிப்பனவுகளுடன் நிதியத்தின் உறுப்பினர்களினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிலுவையாக உள்ள கோரிக்கைத் தொகைகளுக்கான ஏற்பாடு ஏதேனுமிருப்பின் அதனையும் உரிமைக்கோரிக்கைகள் உள்ளடக்குகின்றன.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

**2.8.5 ஏனைய சென்மதிகள்**

ஏனைய சென்மதிகள் அவற்றின் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.8.6 ஏனைய ஏற்பாடுகள்**

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு சகல அறியப்பட்ட ஏற்பாடுகளும் கணக்குகளில் முழுமையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**2.9 வருமானங்களும் செலவுகளும்**

**2.9.1 வருமானம்**

பொருளாதார நன்மையானது நிதியத்திற்கு செல்லும் என்பது சாத்தியமாக இருக்கும் ஓர் அளவிற்கு வருமானம் இனங்காணப்படுவதுடன் வருமானத்தினை நம்பிக்கையாக அளவிட முடியும். வருமானம் இனங்காணப்படுவதற்கு முன்னர் பின்வரும் குறித்த இனங்காணல் தகுதிவிதிகளையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

**அ. தவணைக் கட்டணப் பங்களிப்புக்கள்**

தவணைக் கட்டணங்களானவை அவை நிலுவையாக உள்ள போது இனங்காணப்படுகின்றன.

**ஆ. வட்டி வருமானம்**

எதிர்கால சேகரிப்பு சந்தேகத்திலிருந்தாலொழிய வட்டி வருமானமானது வட்டி அட்டறுக்களாக இனங்காணப்படுகின்றது.

**2.9.2 செலவினத்தை இனங்காணுதல்**

நிதியத்தினை செயற்படுத்துதல் மற்றும் வினைத்திறனான நிலமையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றினைப் பராமரித்தல் ஆகியவற்றில் ஏற்படும் சகல செலவினங்களும் தேறிய மிகையினை அடையும் வருமானத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**2.10 எதிர்பாராத நிகழ்வுகள்**

சபை அபிப்பிராயத்தில், சாதாரண வியாபார நடவடிக்கையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு எதிராக தற்போதுள்ள வழக்கானது அறிக்கையிடப்பட்ட நிதிப் பெறுபேறுகளில் அல்லது நிதியத்தின் எதிர்கால நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்காது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**தேசியகாப்புறுதிநம்பிக்கைப்பொறுப்புநிதியம்**

*(சகலபெறுமானங்களும்இலங்கைரூபாவில்)*

*டிசெம்பர்31 ஆம் திகதியில்முடிவடைந்தஆண்டுக்கானது*

| | 2012 | 2012 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | அக்ரஹாரமற்றும் ஏனைய | வ.க.சி.கொ.ப.நி | மொத்தம் | |
| **01. 01. தேறியஉழைக்கப்பட்டகட்டுப்பணவருமானம்** | | | | |
| கட்டுப்பண வருமானம் – மோட்டார் | 206,595,378 | - | **206,595,378** | 215,199,457 |
| கட்டுப்பண வருமானம் – மீள்காப்புறுதி | 463,610,216 | - | **463,610,216** | 198,551,912 |
| கட்டுப்பண வருமானம் – பாராளுமன்ற | 10,000,000 | - | **10,000,000** | 10,000,000 |
| கட்டுப்பண வருமானம் – வெளிநாட்டு ( | 54,577,250 | - | **54,577,250** | 208,799,952 |
| கட்டுப்பண வருமானம் – பொதுக்காப்பு | 104,047,985 | - | **104,047,985** | 170,876,837 |
